வெல்லுங் கருவியை விரும்புவானானால், வெகுளி /விடல்-சினத்தை விடக்கடவன், எ-று.

(வி-ரை.) இன்றமை இங்கு இழிவுக்காயிற்று. எழுக என்பது ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவினையாயினும், தன்னொடு என்றமையால் பொதுமை நீங்கி ஆண்பாற்படர்க்கைக் குரியதாய் நிற்கின்றமையால் இரவெழுக என்பதனைத் திணைவழுவமைதி என்க. நிலம்-தொழிலடியாகப் பிறந்தபெயர்; நில்-பகுதி, அம் - வினைமுதற் பொருண்மைவிகுதி; அசலை என்னும் வடமொழிக்கும் இதுவே பொருள். மன்னுதல்-இடைச்சொலடியாகப் பிறந்த தொழிற்பெயர்; மன்-பகுதி. செல்வது, வெல்வது-வினையாலணையும் பெயர்; வெல்வதொன்றும் வினைமுதல் வினையைக் கருவியின்மேலேற்றிக் கூறும் வினையாலணையும்பெயர். விடல்-வியங்கோள் வினை; விகுதி அல். ()

கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்.

(இ-ள்.) கலவர் - மரக்கலமுடையார், கடல் - கடலினது, குட்டம் - ஆழமாகிய நீரை, போழ்வர் - ஊடறுத்துச் செல்வர்; பாய் மா உடையான்-(போர்முகத்தில் அஞ்சாமல்)பாயுமியல்புள்ள குதிரையையுடையவீரன், படைக்குட்டம் - (பகைவரது) சேனையாகிய கடற்கரையை, உடைக்கிற்கும் - உடைக்கமாட்டுவான்; தன் உடையான்-(ஐம்புலன்களிற் செல்லவிடாமல்) மனத்தைத் தன்வசப்படுத்தினவன், தோம் இல் - குற்றமில்லாத, தவக்குட்டம் - தவமாகியகடலை, நீந்தும் - நீந்துவான், கற்றான்-(நூல்களை ஐயமறக்) கற்றுணர்ந்தவன், அவைக் குட்டம்-(கற்றவர்கூடிய) சபையாகிய கடலை, கடந்துவிடும்-தாண்டிவிடுவான், எ-று.

(வி-ரை.) குட்டம்-பண்புப்பெயர்; குண்டு-பகுதி, அம்-பகுதிப் பொருள் விகுதி, ணகரம் டகரமானது மெலித்தல் விகாரம், உகரக் கேடு சந்தி; இவ்வாறு முடிந்துநின்ற பண்புப்பெயர் கடற்குட்டம் என்றவிடத்துப் போழ்வர்கலவர் என்றகுறிப்பால் ஆழநீருக்கும், தவக் குட்டம், அவைக்குட்டம் என்றவிடத்து நீந்தும், கடந்துவிடும் என்ற குறிப்பால் கடலுக்கும் ஆனது பண்பாகுபெயர். படைக்குட்டம் என்றவிடத்துக் கடலுக்குப் பண்பாகுபெயராகி, உடைக்கிற்கும் என்ற குறிப்பால் கரைக்கானது முதலாகுபெயர். மரக்கலம் நீரை யூடறுத்துச் செல்வதாதலால் இடத்தின்றொழிலை இடத்துநிகழ் பொருளின்மேலேற்றிக் 'கலவர் போழ்வர்' என்றார். படைக்குட் டத்தை உடைக்கிற்றலாவது - தம்சேனை வலக்கதோதாகி நின்று போர் செய்யும்படி ஏவிக் காத்துநின்ற பகைச்சேனைத்தலைவரை அச்சேனை கரை உடைத்த கடலினீர்போலப் புறங்கொடுத்தோடும்படி வெற்றி கொள்ளல். தவக்குட்டம் நீந்துதலாவது-மனம் புலன்களிற் செல்லா மல் அடக்கவல்லான் கருதிய தவம் முற்றுப்பெறக் காணல். அவை குட்டம் கடந்துவிடுதலாவது - தான் குற்றமில்லாமலும், சுருக்கமாயும், பொருள் விளக்குவதாயும், செவிக்கினியதாயும், சிறந்தபயன் தருவ தாயுமுள்ள சொல்லைச் சொல்லி அவையிலுள்ளோரை மகிழ்வித்தல். கலவர்-பொருளடியாகப்பிறந்தபெயர்; கலம் - பகுதி, அர் - பல்லோர் படர்க்கைவிகுதி, மகரக்கேடும் வகரத்தோற்றமுஞ் சந்தி; இது அறு முகவனென்பதுபோல வந்தது. உடைக்கிற்கும்-செய்யுமென்முற்று; உடை-பகுதி, க்-சந்தி, கில் - ஆற்றற்பொருண்மைவிகுதி, அனைத்து மொருபகுதி, கு-சாரியை, உம்-ஆண்பாற்படர்க்கை எதிர்காலமுற்றுப் பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. இவ்வினை பலர்பாலல்லாத மற்றபால்களுக்குப் பொதுவாயினும் உடையானென்னும் சிறப்புப் பெயரால் பொதுமை நீங்கி அப்பாலுக்குரியதாயிற்று. கடந்துவிடும் அவ்வினைமுற்று; கட-பகுதி, த்-சந்தி, து - சாரியை, விடு - துணிவுப் பொருண்மைவிகுதி, சந்தித்தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்,

அனைத்து மொருபகுதி, உம் விகுதியும் அப்பொருளது, உகரக்கேடு சந்தி. (கக)

பொய்த்த விறுவாய நட்புக்கண் மெய்த்தாக
மூத்த லிருவாய்த் திளைநலந் தூக்கில்
மிகுதி யிறுவாய செல்வங்க டத்தம்
தகுதி யிறுவாய்த் துயிர்.

(இ-ள்.) நட்பு - நட்புக்கள், பொய்த்தல் - பொய்யாக ஒழுகுதலாகிய, இறுவாய - இறுதியுடையன; இளை நலம்-இளமைப்பருவத்தினழகு, கண்மெய்த்து ஆக-(காண்போர்)கண்களுக்கு மெய்மையுடையதாக, மூத்தல் இறுவாய்த்து - மூப்பாகிய இறுதியையுடையது; செல்வங்கள்-செல்வங்கள், தூக்கு இல் - (இம்மை மறுமைப்பயன்களை) ஆராய்தலில்லாத, மிகுதி இறுவாய - வேண்டாத செய்கையாகிய இறுதியையுடையன; தத்தம் - தங்கள் தங்களது இருவினைக்கும், தகுதி இறுவாய்த்து உயிர் - தகுந்தவாழ்நாளாகிய இறுதியையுடையதுயிர், எ-று.

(வி - ரை.) நட்புக்கொண்ட இருவருள் ஒருவனிடத்துப் பொய்யொழுக்க முண்டானவளவில் அந்நட்புக் கெடுமென்பதும், இளமைப் பருவத்திலுண்டாகிய அழகு மூப்புவந்த வளவில் பிரத்தியட்சமாகக் கெடுமென்பதும், பழியையும் பாவத்தையுந் தருவதாகிய செய்கை ஒருவனிடத்துண்டானவளவில் அவன் செல்வங்கெடுமென்பதும், இருவினைப்பயன்களையும் அநுபவிக்கும்படி நியமித்த நாள் முடிவில் உயிர் உடலைவிட்டு நீங்குமென்பதும் கருத்தாகக் கொள்க. இறுவாய - இடமடியாகப்பிறந்த பலவின்படர்க்கைக் குறிப்புவினைமுற்று; வினைத்தொகைநிலைத்தொடராகிய இறுவாய் என்பது ஒரு சொல்லின் தன்மைப்பட்டுப் பகுதியாய் நின்றது; வாயென்பதை இடைச்சொலென்பாருமுளர்; இச்சொல் பொய்த்த லென்பதனோடு

பண்புத்தொகைநிலைத்தொடராகப் புணர்ந்தது; மற்றவைகளையும் இவ்வாறே கொள்க. இளை - பண்புப்பெயர்; இள - பகுதி, ஐ - பகுதிப்பொருள்விகுதி, பகுதியீற்று அகரக்கேடு கடைக்குறை. தூக்கு - முதனிலைத் தொழிற்பெயர். தத்தம் - பன்மைப் பொருட்டாகிய அடுக்கு; அது காரணவாகுபெயர். (௧௭)

மனைக்காக்க மாண்ட மகளி ரொருவன்
வினைக்காக்கஞ் செவ்விய னாதல் சினச்செவ்வேல்
நாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல் கேட்டாக்கம்
கேளி ரொரீஇ விடல்.

(இ-ள்.) மாண்ட மகளிர் - நற்குண நற்செய்கையுடைய பெண்டிரிருத்தல், மனைக்கு ஆக்கம் - (கொண்டவனுடைய) மனைக்கு உயர்வைத் தருவதாகும்; சினம் - கோபமமைந்த, செம் வேல் - (பகைவருதிரத்தில் தோய்ந்ததினால்) செந்நிறமாகிய படைத்தொழிலின் ஒருவன், செவ்வியன் ஆதல் - ஒருவன் தேர்ச்சியுடையவனாதல், வினைக்கு ஆக்கம் - போருக்கு உயர்வைத் தருவதாகும்; இவ்வேந்து - இவ்வரசன், நல்லன் என்றல் - நல்லவனென்று (குடிகளால்) சொல்லப்படுதல், நாடு ஆக்கம் - (அவனாளும்) நாட்டுக்கு உயர்வைத்தருவதாகும்; கேளிர் - சுற்றத்தாரை, ஒரீஇ விடல் - (ஒருவன்) நீங்கிவிடுதல், கேடு ஆக்கம் - (அவனுக்கு வரும்) கேட்டுக்கு உயர்வைத் தரும் (மிக்க கேட்டை விளைக்கும்), எ-று.

(வி-ரை.) ஆக்கம் - ஆகுதல்; அது உயர்தலுக்காயிற்று. பெரியன் நாடு என்பதுபோல நின்ற செவ்வியன் செவ்வேல் என்பதனைச் செவ்வேல் செவ்வியனெனக் கூட்டுக; பொருள் விளங்கும்படி ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராக வைத்து உரைத்தாலும், செவ்வேல் செவ்வியன் என்பது திணைவழுவமைதியாகக் கொண்டு எழுவாய்த் தொகாநிலைத்தொடரென்க. செவ்வியன் - பண்

படியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று; செவ்வி-திருத்தம்; அது சேர்ச்சிக்காயிற்று. என்றல் - செயப்பாட்டு வினைத்தொழிற்பெயர்; இது படு விகுதி முதலியன தொகுத்தலாய் நின்றது. கேடு-முதனிலை திரிந்த தொழிற்பெயர். கேளிர்-பண்படியாகப் பிறந்தபெயர்; கேண்மை என்னும் பகுதி, இர் என்னும் பல்லோர்படர்க்கை விகுதிப் புணர்ச்சியில் மை விகுதி கெட்டது.ஒரீஇவிடல்: ஒரு-பகுதி, இ-சாரியை, உகரக்கேடு சந்தி, சாரியை இகரம் ஈகாரமானதும் அது சொல்லிசை நிறைக்க அளபெழுந்ததும் நீட்டல்விகாரம், விடு - துணிவுப் பொருண்மை விகுதி, அனைத்து மொருபகுதி, அல்-புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. (கஅ)

பெற்றா னதிர்ப்பிற் பிணையன்னா டானதிர்க்கும்
கற்றா னதிர்ப்பிற் பொருளதிர்க்கும் பாரிய [பின்
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும் பண்ணதிர்ப்
பாட லதிர்ந்து விடும்.

(இ-ள்) பெற்றான் - கொண்ட கணவன், அதிர்ப்பின் - (இல்லறத்துக்குரிய ஒழுக்கத்தினின்று) கலங்குவானாயின், பிணை அன்னாள் - பெண்மானை ஒத்த அவன் மனையாளும், அதிர்க்கும் - (அவ்வொழுக்கத்தினின்று) கலங்குவாள்; கற்றான் அதிர்ப்பின் - (நூல்களைக்) கற்றுணர்ந்தவன் (அறிவு) கலங்குவானாயின், பொருள் அதிர்க்கும் - (அந்நூலா லுணர்த்தப்பட்ட) பொருள்களும் கலங்கும்; பாரிய மண் அதிர்ப்பின் - தன் பெரிய நாட்டிலுள்ளார் (தன் ஆளுகைக்குள் அமையாமல்) கலங்குவாரானால், மன்னவன் கோல் அதிர்க்கும் - அரசனுடைய ஆளுமுறையுங் கலங்கும்; பண் அதிர்ப்பின் - யாழின் கட்டுநிலை கலங்குமானால், பாடல் அதிர்ந்துவிடும் - பாடுதற்றொழிலும் கலங்கிவிடும், எ - று.

(வி-ரை.) அதிர்ப்பு நடுக்கமாதலால் கலக்கமெனப் பொருள் உரைக்கப்பட்டது. பொருளதிர்த்தலாவது-கற்றவன் அறிவின் கலக்

கத்தால் தான் நூற்பொருளை முன்னேடு பின்முரணக் கூறல். அர சன் கொடுமை செய்வானுயின் அவ்னுட்டுக் குடிகள் கலக்கத்தை யடைவார்கள்; அடையவே இவனது ஆளுகையைக் கடந்து நடப் பார்களாதலால் கோலதிர்ப்பதாயிற்று. அதிர்ப்பின் என்பது காரணப் பொருட்டாதலால் இறந்தகாலத்தில் வந்தது; அதிர்-பகுதி, ப் - சந்தி; ப்-விரித்தல் விகாரம், இன் - வினையெச்சவிகுதி, இதவே காலங் காட்டியது. பிணை : மான், புல்வாய், நாய், பன்றி இவற்றின் பெண் ணுக்கு மரபுபற்றிய பெயராயினும் மாதருடைய கண்களுக்கு மான் கண்களையே தொழிலுவமமாகக் கூறுதல் மரபாதலால் அதற்குப் பெண்மானெனப் பொருள் கூறப்பட்டது; மரபுபற்றிய பெயரென் பது "வடிவுள வுழைபுல் வாய்நாய் வராகமே பிணையின் வைக்கும்" என்னும் நிகண்டாலும் காண்க. பரிய.-பண்படியாகப் பிறந்த குறிப் புப்பெயரெச்சம்; அ என்னும் பெயரெச்ச விகுதிப்புணர்ச்சியில் பருமை என்பது மை யீறுகெட்டு, பரு என ஆதி நீண்டு, பாரி என இடை உகரம் இகரமாகி, யகர உடம்படுமெய் பெற்றது. மண் நாட்டுக்குக் கருவியாகுபெயராய், அது தன்னிலுள்ளாருக்கு இட வாகுபெயராய் நின்றது. மன்னவன்-இடைச்சொலடியாகப் பிறந்த பெயர்; மன்-பகுதி. கோல்-உவமையாகுபெயர். அன்னுள் என்பத னீற்றில் எதிரதுதழீஇயதும், பாடல் என்பதனீற்றில் இறந்தது தழீஇயதும், பொருள்,கோல் என்பவற்றி னீற்றில் எதிரதுதழீஇயத னேடு இறந்ததுதழீஇய எச்ச உம்மையும் தொகுக்கப்பட்டன. 'பற் றிய, மண்ணதிர்ப்பின்' எனவும் பாடமுண்டு; பற்றிய-கைக்கொண்ட எனவுரைக்க. (கக)

மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

(இ-ள்.) மனைக்குப் பாழ் - வீட்டுக்குப் பொலிவின்மையாவது, வாணுதல் இன்மை - (நற்றுண் நற்செய்கையுடைய) மனையாளை யுடையதாயிராமை; தான் செல்லும் திசைக்குப் பாழ் - (ஒருவன்) தான் சென்ற இடத்துக்குப் பொலிவின்மையாவது, நட்டோரை இன்மை - (தன்னுடன்) நட்புக்கொண்டவரை உடையனுயிராமை; இருந்த அவைக்குப் பாழ்-(பலர்) கூடின சபைக்குப் பொலிவின்மை யாவது, மூத்தோரை இன்மை-(கல்வியறிவு கேள்விகளால்) முதிர்ந்த வரை உடையதாயிராமை; தனக்குப் பாழ் - தனக்குப் பொலிவின்மை யாவது, கற்று அறிவு இல்லா உடம்பு - (பல நூல்களையும்) கற்று அறிதலில்லாத உடம்பினனுயிருத்தல், எ-று.

(வி-ரை.) கற்றறிவில்லாமை உடலொடு கூடிய வுயிர்க்கே ஆத லால் அவ்வுயிர்க்கும் உடம்புக்கும் உளதாகிய ஒற்றுமையைக் கருதி உடலின்மேலேற்றிக் 'கற்றறிவில்லா வுடம்பு' என்றார். வாணுதல்- பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயர்; விரித்தால் வாளாகிய நுதலேயுடையாளென விரியும்; இரண் டாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயருமாம்; பொருள்-ஒளியைப்பெற்ற நெற்றியை யுடை யாள் என்பது. இன்மை-குறிப்புத்தொழிற்பெயர்; இது செயப்படு பொருள் குன்றியும், குன்றாதும் வரும்; இங்குச் செயப்படுபொருள் குன்றாமல் வந்தது; இதற்கு எழுவாய் பாழ். மூத்தோர் - இறந்தகால வினையாலணையும் பெயர்; பகுதி முதிரென்பதன் மரூஉ ஆகிய மூ- விகுதி, ஆ-ஒ ஆனது செய்யுள் வழக்கம். (௨௦)

மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போனு மேனியைப் பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்கும்
கூடார்கட் கூடி விடின்.

(இ-ள்.) ஒற்றுமை இன்மை - (தகுந்தவரோடு) ஒருமைப்பாடில்லாமை, மொய் சிதைக்கும் - தன் வலியை அழிக்கும்; பொய் - பொய்யானது, ஒருவனைப் பொன்போலும் மேனியை - (தன்னைக் கூடிய) ஒருவனது பொன்னை ஒக்கும் (உடலினது) நிறத்தை, சிதைக்கும் - அழிக்கும்; பெய்த கலம் - (பாலை) வார்த்த (கெட்ட) பாத்திரமானது, பாலின் சுவையைச் சிதைக்கும் - அப்பாலினது மதுரத்தை அழிக்கும்; கூடார்கண் - நட்புச்செய்யத்தகாதவரிடத்து, கூடிவிடின் - நட்புச்செய்துவிட்டால், குலம் சிதைக்கும்-(அந்நட்பானது) தன் குலத்தினது பெருமையை அழிக்கும், எ-று.

(வி-ரை.) ஒருமைப்பாடு தான் அவரொன்றும் வேறுபாடில்லாமை. ஒருமைப்பாடிலராயின், இஃதறிந்து பகைவர் அவனை எளிதில் வெல்வாதலால் 'ஒற்றுமையின்மை மொய்சிதைக்கும்' எனவும், பொய் மறைக்கப்படாததாதலால் பிறராலறியப்பட்டபோது அதற்கு நாணும் நாணத்தால் கூறினவன்மேனிவாடும்; அவ்வாட்டம் பொய்காரணமாக உண்டாவதாதலால் 'பொய் மேனியைச் சிதைக்கும்' எனவும் கூறினர். ஒற்றுமை-பண்புப்பெயர்; பொருள்: ஒன்றாந்தன்மை; ஒன்று வலித்து நின்ற ஒற்று-பகுதி, மை-பகுதிப்பொருள் விகுதி; இதனடியாக ஒற்றினான், ஒற்றி, ஒற்றின, ஒற்றுதல் என வினைகள் பிறக்குமாறு காண்க. கன்றூட் குத்தினான் என்பதுபோலக் கூடார்கட் கூடிவிடின் என்பது செயப்படுபொருள் இடப்பொருளாய் நின்றது. பாலின் சுவையை என்பதற்குப் பாலினது இனிய சுவையை என உரைத்தலுமாம். (உக)

புகழ்செய்யும் பொய்யா விளக்க மிகந்தொருவர்ப்
பேணாது செய்வது பேதைமை காணாக்
குருடனைச் செய்வது மம்ம ரிருடீர்ந்த
கண்ணாரச் செய்வது சற்பு.

(இ-ள்.) பொய்யா விளக்கம் - பொய் சொல்லாமையாகிய விளக்கம், புகழ் செய்யும் - புகழை உண்டாக்கும்; பேதைமை - யாதும் அறியாமை, ஒருவர் பேணாது - பெரியாரொருவரை (த்துணையாக) விரும்பாமல், இகந்து-(அறத்தினெல்லை) கடந்து, செய்வது - (தீங்கினைச்) செய்யவல்லது; மம்மர் - (கல்லாமையால் வரும்) மயக்கம், காணாத - (செல்லும் வழியினியல்பை) அறியாத, குருடன் ஆக செய்வது - (ஒருவனைக்) குருடனாகச் செய்யவல்லது; கற்பு - கல்வியறிவு, இருள் தீர்ந்த - மயக்கத்தினின்று நீங்கிய, கண்ணார் ஆக செய்வது - கண்களுடையராகச் செய்யவல்லது, எ-று.

(வி - ரை.) தொழிலும் பண்பினுளடங்குமாதலால் பொய்யா விளக்க மென்பதனைப் பண்புத்தொகைநிலைத்தொடராகக் கொள்ளுதலே அன்றிப் பொய்யாத என்பது ஈறுதொகுத்தலாய் நின்ற பெயரெச்சத்தொடராகவுங் கொள்ளலாம். விளக்கமென்றது பொய்யாமையாகிய செயலை ஆதலால் பொய்யாத என்னும் பெயரெச்சம் செயற்பெயர் கொண்டதென்க. பொய்யாமையுடையானை அது யாவரும் அறிந்து நன்குமதிக்கச் செய்தலால் 'விளக்கம்' என்றார். விளக்கம் - தொழிலடியாகப் பிறந்தபெயர்; விளங்கு - பகுதி, அம் - வினைமுதற் பொருண்மைவிகுதி, மெல்லொற்று வல்லொற்றானது வலித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி; அதனைத் தொழிற்பெயராகக்கொண்டு விளக்கேற்றருஞ்சுடரை விளக்க மென்றதனால் காரியவாகுபெயரெனவும், தொழிலாகுபெயரெனவும் சொன்னலுமாம். விளக்கமென்பதில் அம் படைபெயர்ச்சி விகுதி; மற்ற வுறுப்புகளை வினைமுதற்பொருண்மை விகுதிப்புணர்ச்சிக்குச் சொல்லியதுபோலவே சொல்லுக. கற்பு - காரணவாகுபெயர்; தொழிலாகுபெயரெனினும் ஆம். குருடனாக, கண்ணாராக என்பவற்றில் அகாவிகுதியும், அது பற்றிவந்த சாரியையும், சந்தியும் தொகுக்கப்பட்டன. (உஉ)

மலைப்பினும் வாரணந் தாங்கு மலைப்பினும்
அன்னேயென் றேடுங் குழவி சிலைப்பினும்

நட்டார் நடுங்கும் வினைசெய்யா ரொட்டார்
உடனுறையுங் காலமு மில்.

(இ-ள்.) மலைப்பினும் - (தன்னோடுபாகன்) போர் செய்தாலும், வாரணம் தாங்கும்-யானை (அவனைத்) தாங்காநிற்கும்; அலைப்பினும்- (தன்னைத் தாய்) அடித்து வருத்தினாலும், குழவி-பிள்ளை, அன்னே என்று ஓடும் - தாயே என்று சொல்லிக்கொண்டு (அவள் பின்னே) ஓடும்; நட்டார் - நட்புக்கொண்டவர், சிலைப்பினும் - (ஒருபொருளைப் பற்றித் தம்மில்கோபங்கொண்டு) உரத்துப்பேசினும், நடுங்கும் வினை செய்யார்-ஒருவருக்கு ஒருவர்) நடுங்குதற்கேதுவாகிய தொழிலைச்செய் யார்; ஒட்டாரும் - பகைவரும், உடன் உறையும்-(ஒருவரை ஒருவர் மனத்தால்) பிரியாமல் நட்புக்கொள்ளும், காலம் இல் - காலமில்லை, எ - று.

(வி-ரை.) தாங்குமென்ற குறிப்பால் வாரணமென்னும் பல பொருளொருசொல் யானைக்காயிற்று. மூன்றுள்ள உம்மைகள் மூன்றும் உயர்வுசிறப்பு; பின்னுள்ள உம்மையை ஒட்டாரென்பத னோடு கூட்டுக; இது ஒருபுடை யிறந்ததுதழீஇய எச்சவும்மை. உடன்-நீக்காமைப் பொருளதாகிய இடைச்சொல். அன்னை என்னும் பொதுப்பெயர் விளியுருபேற்றபோது ஈற்றைகாரங் கெட்டு ஏ மிகுந் தது. குழவி-பண்படியாகப் பிறந்த பெயர்; குழவு - பகுதி (பண்புப் பெயர்), இ-ஒன்றன்படர்க்கைவிகுதி, உகரக்கேடு-சந்தி; இவ்வாறன் றிக் குழ-பகுதி, வ்-உடம்படு மெய்யாகிய சந்தி, இ அவ் விகுதி எனினுமொக்கும். சிலைத்தல்-ஒலித்தல்; நட்டார்-இறந்தகால வினையா லணையும் பெயர்; நள்-பகுதி, ட் - இறந்தகால இடைநிலை, ஆர் - பல் லோர் படர்க்கை விகுதி, ளகரம் டகரமானது சந்தி; ஒட்டார் - எதிர் மறை வினையாலணையும்பெயர்; ஒட்டு-பகுதி, ஆ - எதிர்மறைவிகுதி, உகரக்கேடு-சந்தி, அனைத்துமொருபகுதி, ஆர் - பல்லோர் படர்க்கை விகுதி, விகுதி ஆகாரக்கேடு முதற்குறைவிகாரம்; ஒட்டுதல் - மனம் பொருந்துதல். (௨௧)

நகைநல நட்டார்க ணந்துஞ் சிறந்த
அவைநல மன்பின் விளங்கும் விசைமாண்ட
தேர்நலம் பாகனாற் பாடெய்து மூர்நலம்
உள்ளானா லுள்ளப் படும்.

(இ-ள்.) நகை நலம்-முகமலர்ச்சியினது நன்மை, நட்டார்கண்-நட்புக்கொண்டவர்களுக்குள், நந்தும்-சிறக்கும்; சிறந்த அவை நலம்-(கற்றறிந்தவர் கூடியதனால்) சிறந்த சபையினது நன்மை, அன்பின் விளங்கும் - (அக்கற்றவர்கள் ஒருவர்பால் ஒருவர் வைத்த) அன்பினாலே விளங்கும்; விசை மாண்ட - விரைந்தோடுதல் மிகுந்த, தேர் நலம் - தேரினது நன்மை, பாகனால் - (நடத்துந் தேர்ச்சியுள்ள) சாரதியினால், பாடு எய்தும் - பெருமையடையும்; ஊர் நலம் - நாட்டினது நன்மை, உள்ளானால் - உடைய அரசனால், உள்ளப்படும்-நன்கு மதிக்கப்படும், எ-று.

(வி-ரை.) உள்ளானென ஒருமையாற் கூறியதனாலும், நாடுள்ளவன் அவனே யாதலாலும் அச்சொல்லுக்கு அரசனெனப் பொருளுரைக்கப்பட்டது; அவன் தண்ணளிசெய்து காப்பானானால் குடிகள் பெருகி நாடு சிறக்குமாதலால் நாட்டினது நன்மையை மதித்தற்கு அவனைக் கருவியாக்கிக் கூறினார். உள்ளுதற்குக் கருத்தா அறிவுடையாரெனக் கொள்க. படும் - தேற்றப்பொருள்தரும் தொழிற்பெயரென்று கொள்ளற்க. உள்ளப்படும் செய்புமென் செயப்பாட்டு வினைமுற்று; உள்-பகுதி, ள்-சந்தி, அ-சாரியை, ப்-சந்தி, படு-செயப்பாட்டுவினைப்பொருண்மை விகுதி, அனைத்துமொருபகுதி, உம்-எதிர்காலச்செய்யுமென்முற்று விகுதி, உகரக்கேடு-சந்தி. நகை-தொழிற்பெயர்; நகு-பகுதி, ஐ-புடைபெயர்ச்சிவிகுதி, உகரக்கேடு - சந்தி; இவ்வாறன்றி முதனிலைத்தொழிற்பெயராகக் கொள்ளலுமாம். விகுதி பெறின் நகைத்தல், நகைப்பு எனப் பெறும்; அது முகமலர்ச்சியை யுணர்த்தவந்த குறிப்புச்சொல்; நகை நலமென்றும் பாடமுண்டு.

பொருள் விருப்பத்தினது தன்மை என்பது. விசைமாண்டதேர்-பால் வழுவமைதி; முன்னது எழுவாய்த் தொகாநிலைத்தொடர். (உச)

அஞ்சாமை யஞ்சுதி யொன்றிற் றனக்கொத்த
எஞ்சாமை யெஞ்ச லளவெல்லா நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள்பெறினு நாடாதி
நட்டார்கண் விட்ட வினை.

(இ-ள்.) அஞ்சாமை - (பழிபாவங்களை) அஞ்சாதிருத்தலை, அஞ்சுதி - அஞ்சுவாய்; அளவு எல்லாம் - (தேகத்தோடு கூடிவாழ) அளவுசெய்த நாளெல்லாம், ஒன்றின் - கூடுமாயின், தனக்கு ஒத்த - வருணத்துக்குத் தகுந்த ஒழுக்கங்களினின்று, எஞ்சாமை - சுருங்காமை, எஞ்சல்-சுருங்காதே; நெஞ்சு அறிய-மனமறிய, கோடாமை-(யாவரிடத்தும்) நடுவாக நிற்றலை, கோடி - கொள்ளுவாய்; பொருள் பெறினும் - மிக்கபொருள் பெறுவதா யிருப்பினும், நட்டார்கண் - (தேறிக்கொண்ட) நட்பினரிடத்து, விட்ட வினை - செய்யவிட்ட தொழிலை, நாடாதி - ஆராயாமலிரு, எ - று.

(வி-ரை.) படர்க்கை ஒருமைப்பெயரா யிருத்தலாலும், ஒத்த வென்றதனாலும் தனக்கென்பதற்கு வருணத்துக்கெனப் பொருள் கொண்டாம். நட்டார்கண் விட்டவினையை நாடினால் ஐயப்பட்டா னென நட்புக்கெடும்; கெடவே வினையைச் சோரவிடுவர். அஞ்சாமை, எஞ்சாமை, கோடாமை-எதிர்மறைத் தொழிற்பெயர்கள்; அஞ்சு-பகுதி, ஆ-எதிர்மறைவிகுதி, உகரக்கேடுசந்தி, அனைத்துமொருபகுதி, மை - பகுதிப்பொருள்விகுதி. மற்றவைகளுக்கும் இவ்வாறே பகுபத இலக்கணங் கூறுக. அஞ்சாமை, எஞ்சாமை, கோடாமை, நாடாமை என்பவைகளை எதிர்மறை வியங்கோள் வினைமுற்றென்று சிலர் கொண்டிருக்கின்றனர்; அந்தப் பக்ஷத்தில்: அஞ்சுவது ஒன்றின் - பயப்படவேண்டியதான சங்கடம் நேர்ந்தால், அஞ்சாமை - (அதற்கு

மனத்தளர்ந்து) பயப்படாம லிருக்கவேண்டும்; தனக்கு ஒத்தவை களில் குறையாம லிருக்கவேண்டும்; நெஞ்சு அறியக் கோடாம லிருக்கவேண்டும். 'நட்டார்கண் விட்ட வினையை நாடாம லிருக்க வேண்டும்' என்று பொருளுரைத்துக்கொள்க. கோடுதல் - கோணு தல்; அது இங்குப் பக்ஷபாதத்துக்காயிற்று. அஞ்சுதி, கோடி என்பன ஏவலொருமைவினை; கொள் - பகுதி, இ - ஏவலொருமை எதிர்கால விகுதி, த்-எழுத்துப்பேறு, பகுதி முதல்நீண்டது நீட்டல்விகாரம், தகரம் டகரமானதும், ளகரங்கெட்டதும் சந்தி. எஞ்சல், நடாதி-ஏவ லொருமை எதிர்மறைவினை; எஞ்சு - பகுதி, அல் - ஏவலொருமை எதிர்மறைவிகுதி, உகரக்கேடுசந்தி. நாடு-பகுதி, ஆ-எதிர்மறைவிகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, த்-எழுத்துப்பேறு, இ-ஏவ லொருமை எதிர்கால விகுதி. உம்மை உயர்வுசிறப்பு. (உ௫)

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.

(இ-ள்.) பிற உயிரை - (தன்னின்) வேறாயினவாகிய பிராணி களை, அலைப்பான் - கொல்லுதற்பொருட்டு, ஆக்கலும்-வளர்த்தலும், குற்றம் - குற்றமான காரியமாகும்; ஊன் - மாமிசத்தை, விலைப்பா லில் - விலையினது உரிமையினால், கொண்டு-வாங்கி, மிசைதலும் - உண்ணுதலும், குற்றம் - குற்றமான காரியமாகும்; சொலல்பால - சொல்லுதற்குரிய தன்மையையுடையன, அல்லாத - அல்லாதனவா கிய சொற்களை, சொல்லுதலும் - சொல்லுதலும், குற்றம்-குற்றமான காரியமாகும்; கொலைப்பாலும்-(ஒருயிரைக்)கொல்லுதலாகிய தன்மை யும், குற்றமே ஆம் - குற்றமான காரியமேயாகும், எ-று.

(வி-ரை.) "பிறிதுயிரை" எனவும் பாடமுண்டு. இதற்குத் தன் னிற்பிறிதாகிய ஒரு பிராணியை என்று பொருள்கொள்க. பிறவுயிர்

என்பது பிறவாகிய உயிர் என்றும், பிறிதுயிர் என்பது பிறிதாகிய உயிர் என்றும் விரிதலின் இவ்விருதொடரும் இருபெயரொட்டுப் பண்புத்தொகைகளே. பிற-பலவின் படர்க்கைப்பெயர்; பிற - பகுதி, அ-விகுதி, பகுதியீற் றகரங்கெட்டது கடைக்குறைவிகாரம். பிறிது-ஒன்றன்படர்க்கைப்பெயர்; பிற - பகுதி, இப்பகுதியின் ஈற்றகரங் கெட்டது கடைக்குறைவிகாரம், இ-சாரியை, து-ஒன்றன்படர்க்கை விகுதி. அலைப்பான் - பான் ஈற்று எதிர்காலவினையெச்சம்; அலை - பகுதி, ப்-சந்தி, பான்-விகுதி; இஃது எதிர்காலவினையெச்சம் என்பதனை, [நன்-வினை-இ-௫-௨௪] "செய்து செய்பு செய்யாச் செய்தூச், செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர், வான்பான் பாக்கின வினையெச்சம் பிற, வைந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்" என்பதனா லறிக. வினைப்பால்-ஆறன்தொகை. பாலில்-இனில் இல் என்றும் ஏழனுருபு ஆல் என்று மூன்றனுருபின் கருவிப்பொருளில் வந்தது. உம்மைகள் நான்கனுள் முதன்மூன்றும் எண்ணுப் பொருளன. ஈற்றும்மை எண்ணுப்பொருளோடு இறந்ததுதழீஇய எச்சப்பொருளது. அதன் பொருள் உண்ணுதற்காகவன்றி வேறு காரணங்களினால் ஒருயிரைக் கொல்லுதலுங் குற்றமென்பது. சொல்லல் என்பது லகரந் தொகுத்தலாய்ச் சொலல் என்றாயிற்று. பால, அல்லாத என்பன முறையே பான்மையையுடைய, அல்லாதனவாகிய சொற்கள் என்றாதலின் குறிப்புவினையாலணையும் பெயர்கள். பான்மை-தன்மை. ஏ-தேற்றப்பொருளது. இச்செய்யுள் அடிமறிமாற்றுப் பொருள்கோளது. அடிமறிமாற்றுப் பொருள்கோள் இன்னதென்பதனை [நன்-பொ-இ-௫-௬௮] "ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும், யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை, மாட்சியு மாறா வடியவு மடிமறி" என்பதனா லறிக. (௨௪)

கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலைப்
பானோக்கி வாழுங் குழவிகள் வானத்

துளிநோக்கி வாழு முலக முலக
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று.

(இ-ள்.) குடி எல்லாம் - குடிகளெல்லாம், கோல் நோக்கி வாழும் - (தம்மரசனது) செங்கோலை நோக்கி வாழாநிற்கும்; குழவிகள் (எல்லாம்)-இளம்பிள்ளைகளெல்லாம், தாய்-தங்கள் தாயினுடைய, முலைப்பால் நோக்கி-முலைப்பாலைநோக்கி, வாழும்-வாழாநிற்கும்; உலகம் (எல்லாம்)-உலகத்துயிர்களெல்லாம், வானத் துளி நோக்கி-மேகத்தினது பெயலை நோக்கி, வாழும் - வாழாநிற்கும்; கூற்று - யமன், உலக விளி நோக்கி - உலகத்துயிர்களினது சாதலை நோக்கி, இன்புறும்-மகிழாநிற்பன், எ-று.

(வி-ரை.) கோலினாலாகிய காவலைக் கோலென்றதும், வானத் துளியினாலாகிய உணவை வானத்துளியென்றதும் கருவியாகுபெயர். நோக்கி வாழ்தல் இன்றியமையாமை ஆதலால் குடிகளுக்குச் செங்கோலினது காவலும், இளம்பிள்ளைகளுக்குத் தாய் முலைப்பாலும், உலகத்துயிர்களுக்கு மழையினாலாகிய வுணவும் இன்றியமையாப் பொருள்களென்பது கருத்து. உடலோடுகூடி வாழ்ந்தகாலத்து உயிர்கள்செய்த நல்வினை தீவினைகளை நடுநிலைமையாக ஆய்ந்து தக்கவாறு தண்டம் விதித்தல் தனக்குத் தொழிலாகக்கொண்ட யமனுக்கு உலகத்துயிர்க ளிறத்தலிலவாயின் தன் தொழில் செய்வனடவாதாதலால் உலகவிளிநோக்கி யின்புறுவானாயினன். குடியெல்லாம்: சொல்லால் அஃறிணையாதலால் வாழுமென்னும் செய்யுமென் முற்றைக்கொண்டது. வான், உலகம்-இடவாகுபெயர்; உலகம் அன்று; உலோகமென்பது வடமொழியாதலால் அது ஆகுபெயரே ஆம். துளி, விளி - முதனிலைத்தொழிற்பெயர்கள். அளபெடை இன்னிசையளபெடை. இன்னிசை அளபெடைக்குக் குறினெடிலா யளபெடுப்பது இலக்கணமெனின் "கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார்" நெடிலளபு இன்னிசை நிறைக்கவந்ததாதலால் அது குற்றமென்க. இது செய்யு

னிசை, சொல்லிசைநிறைக்கவரும் அளபெடைபோலாது செவிக்கினிமையாகிய இசைநிறைக்க வருவதென்க. இன்பு-பண்புப்பெயர்; இதில் பு - விகுதி; விகுதிமேல் விகுதியாய் அம் விகுதிபெற்று இன்பமெனவும் வரும். (உஎ)

கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்பந்தீர்ந் திவ்வுலகின் கோளுணருங் கோளுணர்ந் [தான்
தத்துவ மான நெறிபடரு மந்நெறி
இப்பா லுலகி னிசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும்.

(இ-ள்.) கற்ப-(ஒருவன் நூல்களைக்) கற்பதினால், கழி மடம் - மிகுதியாகிய பேதைமை, அஃகும்-குறைவான்; மடம் அஃக - அறியாமை நீங்குவதினால், புற்பம் தீர்ந்து - புல்லறிவு நீங்கி, இவ்வுலகின் கோள் - இவ்வுலகத்தினது இயல்பினை, உணரும்-அறிவான்; கோள் உணர்ந்தான்-அவ்வியற்கையை உணர்ந்தவன், தத்துவம் ஆன நெறி - உண்மையாகிய வழியில், படரும் - செல்லுவான்; அந்நெறி - சென்ற அவ்வழியினால், இப்பால் - இம்மையில், உலகின் - உலகத்தில், இசை நிறீஇ-புகழை நிலைபெறச்செய்து, உப்பால்-மறுமையில், உயர்ந்த உலகம் - (எல்லாவுலகங்களினும்) உயர்ந்த முத்தியுலகத்தில், புகும் - புகுவான், எ-று.

(வி-ரை.) 'புற்கந்தீர்ந்து'எனவும் பாடமுண்டு; புற்கமென்னுஞ் சொல்லும் புற்பமென்பதன் பொருளதே; புற்பம் பண்புப்பெயர்; புல்-பகுதி, பம்-பகுதிப்பொருள்விகுதி, லகரம் றகரமானது சந்தி. புற்கம்-அப்பண்புப்பெயரே ஆம்; புல்-பகுதி, கு - பகுதிப்பொருள் விகுதி, லகரம் றகரமானது சந்தி, மாட்சிமை என்பதிற்போலப் பகுதிப்பொருள் விகுதியாகிய அம் விகுதிமேல் விகுதி; இச்சொல்லை ஒற்கமென்பதுபோலத் தொழிற்பெயராகக்கொள்ளின் புல்கு-பகுதி, அம்-

புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி, இவ்விகுதிப் புணர்ச்சியில் லகரம் நகரமானதும், உகரக்கேடும் சந்தி எனக் கூறல்வேண்டும்; தொழிற் பெயராகக்கொள்ளின் உலகத்தோடு சம்பந்தப்படுதலே எனப்பொருள் படும்; பொருள்படின் உலகின்கோளுணர்ந்தபின் புற்கம்தீருமே அன் றிப் புற்கந்தீர்ந்து உலகின்கோ ளுணர்தலென்பது பொருளன்மை யால் தொழிற்பெயராகக் கொள்ளலாகா தென்க. நிறீஇ-இதில் இகர விகுதி வந்ததென்பது பிசகு; விகுதி புணர்ந்துகெட்டு என்றிருக்க வேண்டியது; விகுதியே யன்றிப் பகுதி விகாரப்பட்டு வினையெச்ச மாயிற்றென்பது முன்னோர் கொள்கை. உகரச்சுட்டு இங்கு "உப்பக் கங்காண்பர்" என்பதுபோல, அகரச்சுட்டுக்குரிய சேய்மைப்பொரு ளது. இது காரணமாலையணி; காரணமாலையணியாவது முன்முன் உரைப்பவை பின்பின் உரைப்பவைகளுக்குக் காரணமாகக் கூறுவது.

குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம்—அழித்துச்
செறிவுழி நிற்பது காமந் தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு.

(இ-ள்.) நீர் - நீரானது, குழித்த உழி - குழிசெய்யப்பட்ட இடத்திலே, நிற்பது-நிற்கும் இயல்புடையது; பாவம்-பாவமானது, பல்லோர் - (அறிவுடையோர்) பலராலும், பழித்த உழி - பழிக்கப் பட்டவனிடத்து, நிற்பது - நிற்கும் இயல்புடையது; காமம் - காம மானது; அழித்து - (ஒருவன் தவ வொழுக்கத்தைக்) கெடுத்து, செறிவுழி-(தீய ஒழுக்கத்தில்) சேர்ந்தவனிடத்து, நிற்பது - நிற்கும் இயல்புடையது; அறிவு - கல்வியறிவானது, தனக்கு ஒன்று - கற்ற தனக்கொரு துன்பம், உறு உழி - வந்தகாலத்தில், நிற்பது - உதவி நிற்கும் இயல்புடையது, எ-று.

(வி-ரை.) குழித்த, பழித்த என்னும் இறந்தகாலச் செயப் பாட்டு வினைப்பெயரெச்சங்கள் ஈறும்,படுவிகுதிமுதலியவும் தொகுக்

கப்பட்டன. செறிவுழி, உறவுழி என்பன இறந்தகால வினையெச்சமாகவைத்துப் பொருள் கூறினும் அமையும்; செறி-பகுதி, வ்-உடம்படு மெய்யல்லாத மெய்யாகிய சந்தி, உழி - இறந்தகால வினையெச்ச விகுதி. உறவுழி என்பதிலும் வகரம் சந்தி. ஏன்று - எண்ணலளவையாகுபெயர். (௨௧)

திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லையில் லென்னாத
வன்மையின் வன்பாட தில்.

(இ-ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, திருவின்-செல்வப்பொருள் போல, திறல் உடையது இல்லை - வலியுடையது (பிறிது) இல்லை; கற்றலின் - கல்வியறிவுபோல, வாய்த்த - நீங்காத துணைகள், பிற இல்லை - வேறில்லை; எற்றுள்ளும் - (துன்பந்தருவன ஆகிய) எல்லாவற்றிலும், இன்மையின் - வறுமைபோல, இன்னாதது இல்லை - துன்பந்தருவது வேறு இல்லை; இல் என்னாத - (அவ்வறியவர்க்கு) இல்லை என்று சொல்லாத, வன்மையின் - வல்லமைபோல, வன்பாடது இல் - வேறு வல்லமையானது இல்லை, எ-று.

(வி-ரை.) இல்லென்னாத வன்மையென்றது ஈகைத்தன்மையை; இல்லையில்லென்னாத என்பதை வறியார்மேலேற்றி (எமக்கு இப்பொருள்) இல்லையென்று இரவாத என உரைத்தலுமாம். 'இலதென்னும் வன்மையின்' எனவும் பாடமுண்டு; பொருள்: இல்லையென்றுசொல்லும் கடுமைபோலக் கடுமைவேறு இல்லை என்றவாறு; அங்ஙனமன்றி இல்லையென்று சொல்லும் வலியின்மையினும் வேறு வலியின்மை இலதெனவும் உரைக்கலாம். இங்கு, வன்மை வன்பாடதென்னும் இரண்டும் இலதென்னும் என்ற குறிப்பால் வலியில்லாமையை உணர்த்தின. ஐந்தனுருபுகள் ஒப்புப்பொருளன; எல்லைப்

பொருளன ஆகக்கொண்டால் திருவிற்றிறலுடையதில்லை என்பதற்குச் செல்வத்தைப் பார்க்கினும் வலியுடையதில்லைஎன்க. மற்றவற்றிற்கும் இவ்வாறே உரைக்க. கற்றல்-தொழிலாகுபெயர்; காரணவாகுபெயராகவுங் கொள்ளலாம். வாய்த்த-பலவின் படர்க்கை இறந்தகாலவினையாலணையும்பெயர். பிற-இடைச்சொலடியாகப்பிறந்த பலவின் படர்க்கைப்பெயர்; பிற-பகுதி, அ - பலவின்படர்க்கைவிகுதி, பகுதி அகரக்கேடு கடைக்குறை. எற்று-இடைச்சொ லடியாகப்பிறந்த ஒன்றன்படர்க்கைக் குறிப்பு வினைப்பெயர்; என்-பகுதி, று ஒன்றன்படர்க்கை விகுதி, னகரம் றகரமானது சந்தி; என்ன என்னுங் குறிப்புப் பெயரெச்சத்திலும் னகரம் நித்தியமாய் வருதலால் என் என்பதே பகுதி, எகரமன்று. உம்மை முற்றும்மை யாதலால் என் என்பது வினுப்பொருளைவிட்டு எஞ்சாமைப்பொருள் தந்தது; இச்சொல் தொகுதியொருமை. இல்லை என்பது குறிப்புவினையாதலால் அது இல் என்றானது தொகுத்தல்; கடைக்குறை விகாரமெனக் கூறுவாருமுளர். வன்பாடது என்பதில் து-பகுதிப்பொருள்விகுதி, அ-சாரியை. இலம்பாடென்பது போன்ற வன்பாடென்பதற்கு வலியுண்மை என்பதுபொருள்; இது முதனிலைதிரிந்த தொழிற்பெயர். 'வன்பாட்டது' எனப் பாடங்கூறின் அதைக் குறிப்பு வினைப்பெயராகக் கொள்ளல் வேண்டும்; வன்மை குணமன்றே? அதைக் குணியாகக் கூறுதல் குற்றமாமாதலால் கூறலாகாதென்க. (௩௦)

புகைவித்தாப் பொங்கழ லுண்டாஞ் சிறந்த
நகைவித்தாத் தோன்று முவகை—பகையொருவன்
முன்னம்வித் தாக முளைக்கும் முளைத்தபின்
இன்னாவித் தாகி விடும்.

(இ-ள்.) பொங்கு அழல்-(அடுக்களையில்) எரிகின்ற தீயினது இருப்பு, புகைவித்து ஆக-(புறத்தில்) புகைகாரணமாக, தோன்றும்-விளங்கும்; உவகை-(உள்ளத்தில்) மகிழ்வினது இருப்பு, சிறந்த நகை-

(புறத்தில்) மிக்கமுகமலர்ச்சி, வித்து ஆக - காரணமாக, தோன்றும்- விளக்கும்; பகை - (உள்ளத்திலுள்ள) பகைமைக்குணம், ஒருவன் முன்னம் - ஒருவனது குறிப்புச்செய்கை, வித்து ஆக - காரணமாக, மூளக்கும் - (புறத்தில்) தோன்றும்; மூளத்த பின் - தோன்றின பிற்காலத்து, இன்னா வித்து ஆகிவிடும் - (செய்யப்படும்) துன்பந் தருஞ் செய்கைகளுக்கு (அப்பகைமை) காரணமாய் முடியும், எ-று.

(வி-ரை.) அழலுக்குப் புகையும், உவகைக்கு நகையும், பகைக்கு முன்னமும் காரியங்களாயினும், கண்ணுக்குப் புலப்படாமல் நின்ற அழல் முதலியவற்றினிருப்பை ஒருவன் உணர்தற்குப் புகை முதலியன கருவியாயிருத்தலால் அவற்றை 'வித்து'என்றார். வித்து- காரணத்தை உணர்த்துவதோர் குறிப்புச்சொல். புகை - தொழிலடியாகப் பிறந்தபெயர்; புகு-பகுதி, ஐ-வினைமுதற்பொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி. பகை-தொழிற்பெயர்; பகு-பகுதி, ஐ-புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி, உகரக்கேடு சந்தி; மனம் வேறுபடுதலென்பது பொருள். முன்னம் - தொழிலடியாகப் பிறந்தபெயர்; முன்-பகுதி, (குறி) ன் - சந்தி, அம் - செயப்படுபொருண்மைவிகுதி; பொருள்: குறிக்கப்படுவதென்பது; தொழிலாகு பெயருமாம். மூளத்தபின்- வினையெச்சமாகிய ஒருசொல் லன்று; தொடர்மொழியாகக்கொண்டு பெயரெச்சத் தொகாநிலைத்தொடரெனக் கூறுக. ஆக என்பதில் குச்சாரியையும், அதுபற்றிவந்த சாரியை முதலியவுந் தொகுக்கப் பட்டன. ஆகிவிடு மென்பதில் விடு துணிவுப்பொருண்மை விகுதி.

பிணியன்னர் பின்னோக்காப் பெண்டி ருலகிற்
கணியன்ன ரன்புடை மாக்கள்—பிணிபயிரின்
புல்லன்னர் புல்லறிவி னாடவர் கல்லன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர்.

(இ - ள்.) பின் நோக்காத பெண்டிர்-மேல்விளைவை ஆராயாத பெண்டிர்கள், பிணி அன்னர் - (கொண்ட கணவருக்கு) நோயை

ஒப்பாவர்; அன்பு உடைய மாக்கள்-(சம்பந்தமுடையாரிடத்து) அன்புடைய மனிதர், உலகிற்கு - உலகத்துயிர்களுக்கு, *அணி அன்னர் - ஆபரணத்தை ஒப்பாவர்; புல் அறிவின் ஆடவர் - சிற்றறிவையுடைய ஆண்மக்கள், பிணி பயிரின் - (நீரைச்) கட்டுகின்ற பயிரிலுள்ள, புல் அன்னர் - புல்லை ஒப்பாவர்; வல் என்ற-இளகுதலில்லாத, நெஞ்சத்தவர்-மனமுடையார், கல் அன்னர் - கல்லை ஒப்பாவர், எ-று.

(வி-ரை.) மேல்விளைவை ஆராயாமையாவது-கொண்ட கணவருடைய வருவாய்ப் பொருளுக்கு மிகுதியாக உண்டிமுதலியவற்றிற்குச் செலவிட்டுப் பின்படும் இடுக்கணை உணராமை. பிணி-பண்பாகுபெயர். நோய் ஒருவனை வேறுகாரியத்திற் செல்லவொட்டாமல் கட்டுதலால் அதனைப் 'பிணி' என்றது தொழிலாகுபெயர்; வினைமுதற்பொருண்மையதாகிய இகரவிகுதி புணர்ந்துகெட்ட தொழிலடியாகப் பிறந்தபெயரெனினும் ஒக்கும்; புணர்ந்துகெட்ட இகரவிகுதி கருவிப்பொருண்மையதெனின், இக்கருவியைக்கொண்ட வினைமுதல் எப்பொருளென வினவி மறுக்க. அணி என்பதையும் இவ்வாறு கொள்க; இதில் புணர்ந்துகெட்ட ஐ-செயப்படுபொருண்மைவிகுதி. பெண்டிர்-பண்படியாகப் பிறந்தபெயர்; பெண்டு-பகுதி, இர்-பல்லோர் படர்க்கைவிகுதி, உகரக்கேடு சந்தி. பெண்டு - பண்புப்பெயர்; பெண்-பகுதி, து-பகுதிப்பொருள்விகுதி, தகரம்டகரமானது சந்தி. உலகு-இடவாகுபெயர்; இது தமிழ்மொழி. உடைய என்னும் குறிப்புப் பெயரெச்சம் ஈறு தொகுத்தலாய் நின்றது. அன்புடைமாக்களை உலகிற்கு அணியன்னரென்றது, மனைவி, புத்திரர் முதலிய சம்பந்தமுடையாரிடத்து வைத்த அன்பு முற்றியபின் மற்ற உயிர்களிடத்து அருள் பிறத்தலால் அவ்வுயிர்கள் இவரைச் சிறப்பாகச் சொல்லுதலை. வல்லென்ற என்பது இடைச்சொலடியாகப்பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம். என் என்னும் பகுதிக்குப் பொருள் தானடுத்த வல் என்னும் பண்பின் பொருளேயாம். 'பிணிபேணும் புல்லன்னர்' எனப்

பாடங் கொள்ளின், 'நோயை நீக்காமல் வளர்க்கின்ற விஷப்புல்லை ஒப்பாவர்' என வுரைக்க. (கஉ)

அந்தணரி னல்ல பிறப்பில்லை யென்செயினும்
தாயிற் சிறந்த தமரில்லை யாதும்
வளமையோ டொக்கும் வனப்பில்லை யெண்ணின்
இளமையோ டொப்பதூஉ மில்.

(இ - ள்.) அந்தணரின் - பார்ப்பாரைப்போல, நல்ல பிறப்பு - உயர்ந்த பிறப்பினர், இல்லை - இலர்; என் செயினும் - (தனக்கு) என்னதீங்கைச் செய்தாலும், தாயின் - தாயைப்போல, சிறந்த தமர் இல்லை-சிறந்த உறவினரிலர்; யாதும்-சிறிதும், வளமையோடு-செல்வத்தோடு, ஒக்கும் - ஒப்பாகும், வனப்பு இல்லை - அழகு இலது; எண்ணின் - ஆராய்ந்தால், இளமையோடு - (எல்லா இன்பங்களையும் அநுபவித்தற் குரியதாகிய) இளமைப்பருவத்தோடு, ஒப்பதும்-ஒத்த பருவமும், இல் - இலது, எ - று.

(வி-ரை.) அந்தணரினென்ற குறிப்பால் பிறப்புத் தொழிலாகு பெயராய் மற்றவரை யுணர்த்திற்று; அந்தணர் - அழகிய தண்மை யுடையாரெனவும், அந்தம் அணர்எனப் பதம் பிரித்து வேதமுடிவின் பொருளை அறிந்து சேர்தலுடையாரெனவும் பொருள்கொள்க; இது இடுகுறிமாத்திரத்தால் பார்ப்பார்க்கும், காரணங் கருதியபோது அக் குணமுடைய பிறர்க்கும் ஆதலால் காரண விடுகுறிப்பெயரென்க. என் - வினைப்பெயர். செயினுமென்ற உம்மை உயர்வுசிறப்பினோடு எதிர்மறைக்கண் வந்தது. உயர்வுசிறப்பொன்றே கொண்டு, தமர்மே லேற்றி 'என் செயினும்' என்பதற்கு 'என்ன நன்மை செய்தாலும்' எனவும் உரைக்கலாம். அழகில்லாரையும் யாவரும் விரும்பச் செய்ய வல்லது செல்வமாதலால் அதனோடொக்கும் அழகிலதாயிற்று. சுகங் களை அநுபவிப்பதற்குரியதும், கல்வி முதலியவற்றைப் பெறுதற்

தும், உடல்வலி உடமைகரும உாயதுமாதலால ளமையோடொ த்த பருவ மிலதாயிற்று. ஒடுருபிரண்டும் ஒப்புப்பொருளன. ஒப்பது- எதிர்கால வினையாலணையும் பெயர்; பருதி - ஒ உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. யாது மென்பது உம்மை முற்றும்மையாதலால் யாவென்னும் வினு சிறமையை யுணர்த்தியது. வளமை என்னும் பண்புப்பெயரினிடையே அகரம் சாரியை. (கக)

இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப—தேரின்
அரிய வரியவற்றாற் கொள்ப பெரிய
பெரியார னெய்தப் படும்.

(இ - ள்.) இரும்பு - இரும்பினை, இரும்பின் - இரும்பாற் செய்த கருவியால், இடை போழ்ப - (கொல்லர்) நடுவில் துண்டிப் பர்; பெரு சிறப்பின் - மிக்க சிறப்பினையுடைய, நீர் - சோற்றோடு கூடிய நீரை, உண்டார் - உண்டவர், நீரால் - நீரினாலே, வாய் பூசுப- உண்டவாயினைக் கழுவுவர்; தேரின் - ஆராயுமிடத்து, அரிய - (பிற ரால் அடைதற்கு) அரியபொருள்களை, அரியவற்றால் - அருமை யாகிய முயற்சிகளால், கொள்ப-(அறிவுடையோர்)செய்துகொள்வர்; பெரிய - பெரும்பேறுகள், பெரியரால் எய்தப்படும் - பேரறிவுடை யோரால் அடையப்படும், எ-று.

(வி-ரை.) நீர் மிகுதியும், சோறு சிறிதுமாதலால் மிகுதிபற்றி 'நீர்' என்றார் அந்நீரைப் பெற்ற காலத்தி னருமைநோக்கப் 'பெருஞ் சிறப்பினீர் என்றார். வெறு நீருண்டார் நீரால் வாய் கழுவாராதலால் 'சோற்றோடு கூடிய நீர்' என்றும். வாய்பூசுப-இடக்கரடக்கல். முதலி லுள்ள இரும்பு - கருவியாகுபெயர்; அரிய, பெரிய பண்படியாகப் பிறந்த பலவின் படர்க்கைப்பெயர்; இரும்பினென்னும் ஐந்தனுரு பும், நீரான் அரியவற்றான் என்னும் மூன்றனுருபுகளும் கருவிப் பொருளன. பெரியாரனென்பது கருத்தாப்பொருளது. (கச)

மறக்களி மன்னர்முற் றோன்றுஞ் சிறந்த
அறக்களி யில்லாதார்க் கீயுமுற் றோன்றும்
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாங் கயக்களி
யூரிற் பிளிற்றி விடும்.

(இ - ள்.) மறக்களி - (வீரர்களுக்கு) வீரத்தால் வரும் களிப்பு, மன்னர்முன் - (தம்மையுடைய) அரசர்க்குமுன்னே, தோன்றும்- உண்டாம்; சிறந்த அறக்களி - (ஒருவன் மனத்தில்) மிக்க அறத்தால் வருங் களிப்பு, அல்லாதார்க்கு - (மாறு ஈய) வலியில்லாதவர்க்கு, ஈயுமுன் - ஈயுமிடத்து, தோன்றும் - உண்டாம்; வியக்களி - பொருளுடையானுக்கு) ஏவுதலால்வருங்களிப்பு, நல்கூர்ந்தார் மேற்று ஆம்- (அவ்வேவுதல்) வறியாரிடத்ததானால் தோன்றும்; கயக்களி-கீழ்மைக் குணத்தால் வருங்களிப்பு, ஊரில் - (அக்குணமுடையோன் வாழும்) ஊரில், பிளிற்றிவிடும்-(இரையும்) பலரும் அறியத்தோன்றும்,எ-று.

(வி - ரை.) இங்கு அறமென்றது அறச்செய்கை பலவற்றுள்ளும் சிறந்த ஈகையை. உயர்ந்தோரையும், ஒப்போரையும் ஒருவன் ஒன்றுசெய்ய ஏவான்; ஏவின் அவ்வேவல் பயனைத்தராமல் அவமதிப்பைத்தருமாதலால் 'ஏவற்களிப்பு நல்கூர்ந்தார் மேற்று' என்றார். கீழ்மைக்குணத்தால் வருங்களிப்பு ஊரில் பலருமறியத் தோன்றுதலாவது-கீழ்மகன் சிறு காரியத்தைச்செய்து அதனைப் பெருங்காரியமாகக்கருதிப் பலரிடத்துஞ்சென்று சொல்லி மகிழ்தல். ஏவலென்னும் பொருள்பட நின்ற வியம் முதனிலைபெறாத தொழிற்பெயர். வியக்களி நல்கூர்ந்தார் மேற்றென்பதற்கு: வியக்களி - (யாதேனு மொரு பொருளைப் பெற்றால் அதைக்கண்டு)அதிசயிக்குங் களிப்பு, நல்கூர்ந்தார் மேற்று - வறியாரிடத்துத் தோன்றும், எனவும் உரைக்கலாம்; அவ்வாறுரைக்கின் விய என்னும் உரியாகிய முதனிலைத் தனிவினை பெயரெச்சப் பொருளில் வந்ததென்க. களி - முதனிலைத் தொழிற்பெயர். ஈயுமுன்-இறந்தகால வினையெச்சம்; ஈ - பகுதி, ய் - சந்தி,

உம் - சாரியை, இதன் மகரக்கேடு சந்தி, முன்-இறந்தகால வினையெச்சவிகுதி. நல்கூர்ந்தார் மேற்றும்-ஏழாம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்; மேல் - ஏழாம்வேற்றுமை உருபு; அதற்குத் து - பகுதிப் பொருள்விகுதி, லகாரமுந் தகாரமும் றகாரமானது சந்தி. கீழ்மக்களைக் கயவரென்னும் வழக்கு நோக்கி அவரது குணமும் கயவு எனப்பட்டது. பிளிற்றிவிடல் - பேரொலி செய்துவிடல்; அது இங்குப் பலரறியச் செய்தலுக்காயிற்று; இவ்வாறு வருதல் "முகிலின் விம்மி முழங்கின எங்கணும்", "புன்கணீர் பூசறரும்" என்பவற்றுள்ளுங் காண்க. (௩௬)

மையாற் றளிர்க்கு மலர்க்கண்கண் மாலிருள்
நெய்யாற் றளிர்க்கு நிமிர்சுடர் பெய்யல்
முழங்கத் தளிர்க்குங் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமா மேல்.

(இ - ள்.) மலர் கண்கள் - (நீலோற்பலத்தின்) மலர்போலுங் கண்கள், மையால் தளிர்க்கும் - மையினால் நன்கு விளங்கும்; மால் இருள் - பேரிருளில் நிமிர் சுடர் - ஒளி மிகுகின்ற விளக்கம், நெய்யால் தளிர்க்கும் - நெய்யினால் நன்கு விளங்கும்; குருகு-குருக்கத்தி, பெய்யல் முழங்க-(மேகம்) பெய்தலுக்கு முழங்கினால், இலை தளிர்க்கும் - இலைகள் தளிர்க்கும்; மேல் - மேன்மைக்குணமுடையோர், நட்டார் வழங்க - உறவாயினார்க்கு வழங்கும்பொருட்டு, தளிர்க்கும் - பொருள் சிறப்பர், எ-று.

(வி-ரை.) பிறர்க்கு உதவுதற்பொருட்டன்றி உண்ணுதற்கும், வைத்திருப்பதற்கும் பொருள்தேடுங் கீழாய குணத்தினர்போலன்றி மேலாய குணத்தினர் நட்டார் முதலிய பிறர்க் குதவுதற்பொருட்டே பொருள் மிகுதியாகத் தேடுவரென்பது. மாலிரு ளென்பதனைப் பண்புத்தொகைநிலைத்தொடராகக் கொள்ளுதலே அன்றி வினைத்

தொகைநிலைத்தொடராகவுங் கொள்ளலாம்; பொருள்: யாவரும் மயங்குகின்ற இருள் என்பது. மேல்-பண்பாகுபெயர். ஆம் - அசை நிலை. முழங்க என்பது காரணப்பொருட்டாதலால் இறந்தகாலத்தில் வந்த செயவென் வினையெச்சம்; வழங்க என்பது காரியப்பொருட்டாதலால் எதிர்காலத்தில் வந்த அவ்வினையெச்சம். (௩௧)

நகையினிது நட்டார் நடுவட் பொருளின்
தொகையினிது தொட்டு வழங்கின் வகையுடைப்
பெண்ணினிது பேணி வழிபடிற் பண்ணினிது
பாட லுணர்வா ரகத்து.

(இ-ள்.) நகை - முகமலர்ச்சி, நட்டார் நடுவண் - நட்பாயினார்க்குள், இனிது - (அவர்க்கு) இன்பந் தருவதாகும்; பொருளின் தொகை - பொருளின் திரள், தொட்டு - (வெறுப்பில்லாமல்) எடுத்து, வழங்கின் - (உடையோரால் அறத்தின்பொருட்டுக்) கொடுக்கப்பட்டால், இனிது - இன்பந்தருவதாகும்; வகை உடை - (குணத்தின்) வகையையுடைய, பெண் - பெண்ணினது தன்மை, பேணி - (கணவனை உண்டி முதலியவற்றால்)காத்து, வழிபடின் - (அவனைத் தெய்வமாகக் கருதி) வழிபாடுசெய்தால், இனிது - (யாவர்க்கும்) இன்பந் தருவது; பண் - பாலையாழ் முதலியவை, பாடல் உணர்வாரகத்து - பாடுதற்றொழிலை அறிபவரிடத்து, இனிது - இன்பந்தருவன ஆகும், எ-று.

(வி-ரை.) இனிது-பண்படியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று; இதில் பகுதி இனிமை; இன்பெனக் கொள்ளின் புவ் விகுதிகெட்டு, மெலிது, வெளிது என்பனபோல இகரச்சாரியை பெற்றதெனினும் பொருந்தும். நகை என்பதுபோலத் தொகைதொழிற்பெயர்; தொகு-பகுதி, ஐ - புடைபெயர்ச்சிப் பொருள்விகுதி, உகரக்கேடு சந்தி. தொட்டு-இறந்தகால வினையெச்சம், தொடு-பகுதி; உ வினையெச்ச

விகுதி, முற்றியலுகரமாதலால் பகுதி ஒற்றிரட்டியது விரித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி. குணவகை-அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என நான்கு. பெண்-பொருளாகுபெயர். பண்-சாதியொருமை ( )

காப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சாரொன் றீவார் பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சா ருயிர்க்கு.

(இ-ள்.) எஞ்ஞான்றும் - எக்காலிலும், காப்பவர்க்கு-ஒன்றும் ஈயாமல்) ஒளித்துவைக்கு மியல்புடையார்க்கு, செல் சார் - செல்லுதற்குரிய பற்றுக்கோடு, கவிழ்தல் - (அவரைக் கண்டவளவில்) முகங் கவிழ்தலாம்; இரப்பவர்க்கு-யாசிக்கு மியல்புடையார்க்கு, செல்சார் - செல்லுதற்குரிய பற்றுக்கோடு, ஒன்று ஈவார் - (அவர் வேண்டியதாகிய) ஒரு பொருளைக் கொடுக்கு மியல்புடையார்; பரப்பு அமைந்த - (போரில்) சோம்பலின்மையுள்ள, தானைக்குச் செல் சார் - சேனைக்குச் செல்லுதற்குரிய பற்றுக்கோடு, தறுகண்மை - (போர் முகத்தில்) இரக்கமின்மை; உயிர்க்குச் செல் சார்-(ஒருவனது) உயிர்க்குச் செல்லுதற்குரிய பற்றுக்கோடு, ஊன் உண்டல் செய்யாமை - (மற்ற வுயிர்களினது) தசையை உண்ணாமை, எ-று.

(வி-ரை.) காப்பவர், இரப்பவர், ஈவார் இவ்வினையாலணையும் பெயர்களில் பகர வகரங்கள் இயல்பினை யுணர்த்தின. எதிர்காலங் காட்டுவன ஆகக்கொண்டு, இயல்பினால் நிகழ்காலம் எதிர்காலமாக வந்த காலவழுவமைதி எனினும் ஒக்கும், [நன்-பொது-சூ-கஉ] சார்-முதனிலைத்தொழிற்பெயர்; சார்தற்குத் துணையாகிய கோலினை உணர்த்தலால் தொழிலாகுபெயர்; இது இலக்கணையாகத் துணையாயமைந்த பொருளை யுணர்த்திற்று. சாரென்னும் முதனிலையோடு செயப்படு பொருண்மையாகிய ஐ விகுதி புணர்ந்துகெட்ட தொழி

வடியாகப் பிறந்த பெயரெனினும் ஒக்கும். காப்பவர்க்கும், இரப்பவர்க்கும் செல்லுவனவாவன - காத்தலும், இரத்தலுமாம்; தானைக்குச் செல்லுவதாவது-வெற்றி; உயிர்க்குச் செல்லுவதாவது-மறுமைக்குரிய அறம். செல்சாரென்பதில் செல்லென்பது வினைத்தொகைக்குறிப்பாயினும் புணர்ச்சியிலக்கணம் வினைத்தொகைநிலைத்தொடரென்று கூறுக. (கூஅ)

> கண்டதே செய்பவாங் கம்மிய ருண்டெனக்
> கேட்டதே செய்ப புலனுள்வார் வேட்ட
> இனியவே செய்ப வமைந்தார் முனியாதார்
> முன்னியவே செய்யுந் திரு.

(இ - ள்.) கம்மியர் - கம்மாளர், கண்டதே - (தாம்) கண்ட பொருள்போல்வதனையே, செய்ப-செய்யவல்லார்; புலன் ஆள்வார்-அறிவினை யாளுதலுடையார், உண்டு என - (பெரும்பயன்) உள்ள தென்று, கேட்டதே - (ஆரியர்பால்) கேட்ட அறத்தையே, செய்ப-செய்யவல்லார்; அமைந்தார்-(நற்குணங்களால்) நிறைந்தவர், வேட்ட-(தாம்) விரும்பினவற்றுள், இனியவே-(பிறர்க்கு) இனிமையாயினவற்றையே, செய்ப - செய்பவல்லார்; திரு - திருமகள், முனியாதார்-(தம்மின் எளியாரிடத்தும்) கோபஞ் செய்யாதவர், முன்னியவே - கருதினவற்றையே, செய்யும் - செய்வள், எ-று.

(வி-ரை.) கேட்டதே என்பதைப் பாடங்கேட்ட பொருளையே எனப் பொருள் கொள்ளின் அது இடைமாணுக்காது தொழிலாதலால் புலனுள்வார்க்கு இயையாமை காண்க. தேற்றேகாரத்தால் இந்நால்வரும் கண்டது முதலிய நான்கிற்கும் மாறுவனவற்றைச் செய்யாரென்க. கண்டது, கேட்டது, முன்னிய, வேட்ட இந்நான்கு சொற்களும் வினைமுதல் வினையைச் செயப்படுபொருளின்மேலேற்றிக் கூறும் வினையாலணையும் பெயர்கள். இங்ஙனங் கொள்ளாமல்

(வி-ரை.) போா, நில்லா எனவும், உயிரனைத்தும் எனவும் பாடமுண்டு. அப்பாடத்தில் போ், நில் என்பன பன்மையி லொருமை வந்த பால்வழுவமைதி என்க. எனவும், கண்டனவுமென்ற உம்மைகள் மூன்றும் உயர்வுசிறப்பு. எனைத்துமென்ற உம்மை முற்றுப் பொருளோடு இழிவுசிறப்புப் பொருளது. அனைத்துமென்ற உம்மை முற்றும்மை; இவற்றுக்குப் பகுதி முறையே எத்தனை அத்தனை என்பவற்றின் மரூஉ ஆகிய எனை, அனை என்பன. ஏகாரம் தேற்றம். காணுதென்பது ஈறு தொகுத்தலாயிற்று. கண்டன என்றது உள்ள பொருள்களை, காணு கெடுமென்று பாடமாயின் வினைமுற்றெச்சமெனக் கொள்க. நல்லாள் - பெண்ணின் சாதிப்பெயர். பின் இரண்டடியையும் மனையாள்மேலேற்றிக் கூறினும் பொருந்தும். மனையாள் (இல்லறத்தை நடத்தக் கணவனோடு) உடன்பட்டால் செல்வந்தானே பெருகும், அவ்வொழுக்கங் கெடுங்காலத்தில் காணப்பட்ட பொருள்களும் காணப்படாதன ஆகிக் கெடும் என உரைத்துக் கொள்க. (சக)

போரறின் வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரறின் வாடு மரமெல்லா நீர்பாய்
மடையறி னீணெய்தல் வாடும் படையறின்
மன்னர்சீர் வாடி விடும்.

(இ - ள்.) பொருநர்-போர் செய்யவல்ல வீரர்களது, சீர்-வீரத்தின் சிறப்பு, போர் அறின் - போர் இலதானால், வாடும் - வருந்தும்; மரம் எல்லாம் - மரங்களெல்லாம், கீழ் வீழ்ந்த - கீழேபாய்ந்த, வேர் அறின் - வேரறுந்தால், வாடும் - உலரும்; நீள் நெய்தல்-(நீரினளவு) வளர்கின்ற நெய்தற்கொடி, நீர் பாய் - (வருவாயின் வழியே) நீர் பாய்கின்ற, மடை அறின்-குளம் நீர்வற்றினால், வாடும்-உலரும்; மன்னர் சீர் - அரசரது செல்வம், படை அறின் - சேனையிலதானால், வாடி விடும் - நீங்கிப்போம், எ-று.

(வி-ரை.) போர்-முதனிலை பெறாத தொழிற்பெயர்; முதனிலை திரிந்த தொழிற்பெயராயின், விடு வீடு, கூடு கூட்டு, கொள் கோள் என்பனபோல பொரு போரு என ஈற்றெழுத்துக் கெடாமல் வரல் வேண்டுமென்றே! அங்ஙனம் வாராமையால் ஆகாது. பொருநர் "ஆண்டிருக்குநன்" என்பதிற்போல நகரம் நிகழ்கால இடைநிலை யல்லாமையால், உழுநர் என்பதுபோலத் தொழிலடியாகப் பிறந்தபெயரொன்று கொள்க. காரண இடுகுறிப்பெயராகிய மடை இங்குக் குணர்த்துக் காயிற்று; மடை தொழிலடியாகப் பிறந்தபெயர்; மடு-பகுதி, ஐ-வினை முதற்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி; பொருள்:நீரைத் தன்னில் அடக்குவதென்பது.வாடிவிடும்-செய்யுமென்முற்று;வாடு-பகுதி இ-சாரியை, விடு-துணிவுப்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, உம்-எதிர்காலச் செய்யுமென் முற்று விகுதி, உகரக்கேடு சந்தி; இது பெயரெச்சமே வினைமுற்றானது. (௪௨)

ஏதிலா ரென்பா ரியைபிலார் யார்யார்க்குங்
காதலா ரென்பார் தகவுடையார் மேதக்க
தந்தை யுபாத்தி யெனப்படுவான் றாயென்ப
முந்துதாஞ் செய்த வினை.

(இ-ள்.) யார் யார்க்கும்-எல்லாருக்கும், ஏதிலார் என்பார்-அயலாரெனப்படுவோர், இயைபு இலார் - நட்பின்தன்மை யில்லாதவர்; (யார் யார்க்கும்) காதலார்-எல்லாருக்கும் அன்புள்ளார், என்பார்-எனப்படுவார், தகவு உடையார் - நடுவுநிலைமையுடையார்; மேதக்க - மேன்மையுள்ள, (யார்யார்க்கும்) தந்தை எனப்படுவான்-(கற்றவர்) எல்லார்க்கும் பிதா என்று சொல்லப்படுவோன், உபாத்தி - நூல்களைக் கற்பித்தவன்; (யார்யார்க்கும்) தாய் என்ப-பிறந்த எல்லார்க்கும் தாயென்று

சொல்லப்படுவன, முந்து - முற்பிறப்பில், தாம் செய்த வினை - தாம் செய்த நல்வினைகள், எ-று.

(வி-ரை.) நட்பின் தன்மை யில்லாரோடு நட்புக்கொள்வா ரில்லாமையால் அவரை 'ஏதிலார்'என்றும், நடுவுநிலைமையுடையார் யாவரையும் ஒப்பக்காணுதலால் அவரைக் 'காதலார்' என்றும், உபாத்தியாயன் நூல்களைக் கற்பித்தலால் அறநெறியை யுணர்வித்தவனாகுதலால் அவனைத் 'தந்தை' என்றும், முன்னை நல்வினைகள் இம்மையில் இன்பங்களை வேண்டியபடி ஊட்டுதலால் அவற்றைத் 'தாய்'என்றுங் கூறினார். ஏதிலார்: ஏதில் - பகுதி, ஆர் - பல்லோர் படர்க்கைவிகுதி. இப்பகுதி, ஏது இல் என்னுந் தொடர்மொழி. பொருள் : நட்பு, பகை என்னும் இரண்டில் ஒன்றுமில்லாரென்பது. அடுக்குப் பன்மைப் பொருளது. யார் - யாவரென்னும் வினாப்பெயரின் மரூஉ. தகவு - தொழிற்பெயர்; தகு-பகுதி, அ-சாரியை, வு-புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. இப்பகுதியடியாக நடுவுநிலைமை யுடையார்க்குத் தக்காரெனப் பெயர் வழங்கும். மேதக்க-இறந்தகாலப் பெயரெச்சம்; மேன்மை தரு என்பதன் மரூஉவாகிய மேதகு-பகுதி, அ-பெயரெச்ச விகுதி, பகுதி ஒற்று இரட்டியது விரித்தல் விகாரம், அதுவே காலங்காட்டியது, அ-பெயரெச்சவிகுதி, உகரக்கேடு சந்தி. உபாத்தி - வடமொழிச்சிதைவு; உபாத்தியாயனெனவும் வழங்கும். தாயென்ற குறிப்பால் வினை நல்வினைக்காயிற்று. (சங)

பொறிகெடு நாணற்ற போழ்தே நெறிபட்ட
ஐவராற் றானே வினைகெடும் பொய்யா
நலங்கெடு நீரற்ற பைங்கூழ் நலமாறின்
நண்பினர் நண்பு கெடும்.

(இ-ள்.) நாண் - (தனக்கு ஒவ்வாத இழிதொழிலில் ஒருவன்) நாணுதல், அற்ற போழ்தே - நீங்கினபோதே, பொறி கெடும் - (அவ

ணது புகழாகிய) செல்வம் கெடும்; நெறி பட்ட - நல்வழியிலமைந்த, ஐவரால் - ஐம்பொறிகளால், வினை தானே கெடும் - தீவினை முயற்சியில்லாமலே கெடும்; நீர் அற்ற பைங்கூழ் - நீரைப்பெறாத பயிர், பொய்யா - பொய்க்காத, நலம் கெடும் - விளைவு கெடும்; நலம் மாறின் - (ஒருவனது) நற்குணம் வேறுபட்டால், நண்பினர் நண்பு கெடும் - (தன்னோடு) சிநேகர் கொண்ட சிநேகம் கெடும், எ-று.

(வி-ரை.) காணென்றமையால் பொறி புகழ்ச்செல்வமென்றாம். காண்-முதனிலைத் தொழிற்பெயர். ஏகாரமிரண்டும் தேற்றம். நெறி பட்ட - உயர்வுபற்றிவந்த திணைவழுவமைதியாகிய ஐவரென்பது தொகைக்குறிப்புச்சொல். 'காணற்றபோழ்தே பொறிகெடும்' என்பதற்கு 'அசைக்கும் கயிறு அறுந்தபோதே சூத்திரப்பிரதிமையினசைவுகெடும்' எனவும் உரைக்கலாம். போழ்து - பொழுதென்பதன் மரூஉ; போதெனவும் வரும். (௩௪)

நன்றிசா நன்றறியா தார்முன்னர்ச் சென்ற
விருந்தும் விருப்பிலார் முற்சா மரும்புணர்ப்பின்
பாடல்சாம் பண்ணறியா தார்முன்ன ரூடல்சாம்
ஊடு உணரா ரகத்து.

(இ-ள்.) நன்று அறியாதார் முன்னர் - (ஒருவர் செய்த) உபகாரத்தை மறக்குமியல்பினரிடத்து, நன்றி சாம் - செய்த உபகாரம் அழியும்; விருப்பு இலார் முன் - அன்பில்லாதவரிடத்து, சென்ற விருந்தும் - சென்ற விருந்ினரும், சாம் - வாடுவர்; பண் அறியாதார் முன்னர் - பாலையாழ் முதலிய பண்ணையறியாரிடத்து, அருபுணர்ப்பின் - (பண்ணோடு) அருமையாகிய பொருத்தத்தையுடைய, பாடல் சாம் - பாடுதற்றொழில் கெடும்; ஊடல் - (காமத்திற் கின்பமாகிய) ஊடுதலை, உணராரகத்து - அளவறிந்து நீங்காத நாயகரிடத்தில், ஊடல் சாம் - (அன்புடைய மாதர்) ஊடுதல் பயன்படாமல் அழியும், எ-று.

(வி-ரை.) நன்றி சாதலென்றது அவர் நினையாமையை. விருப்பு-முதனிலை திரிந்த தொழிற்பெயர். உம்மை இறந்ததழீஇய எச்சவும்மை. விருந்து-பண்பாகுபெயர்; விருந்தினர் அறிந்துவருபவரும், அறியாமல் வருபவருமென இருவகையர். சாகும் என்பதில் குவ்வுயிர்மெய் கெட்டது; சாவுமெனக் கொள்ளினுங் குற்றமன்று. (சரு)

நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலந் தூக்கின்
அகம்பொதிந்த தின்மை மனமுரைக்கு முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில்.

(இ-ள்.) தூக்கின் - ஆராயுமிடத்து, மலர் உண்மை-நல்ல மலர்களினது இருப்பை, நாற்றம் உரைக்கும் - (அம்மலர்களின்) மணமானது அறிவிக்கும்; வினை நலம் - (ஒருவனுடைய) செய்கையினது நன்மை, கூறிய மாற்றம் - (அவன்) பேசிய சொல், உரைக்கும்-அறிவிக்கும்; அகம்-(ஒருவன் பிறர்க்குத் தோன்றாமல்) தன்னுள், பொதிந்த - மறைத்துவைத்த, தின்மை-தீமையை, மனம் உரைக்கும்-(அவனுக்குத்)தன் மனமே அறிவிக்கும்; முன்னம்-(ஒருவனது)கருத்தை, முகம்போல - முகத்தைப்போல, முன் உரைப்பது - முன்னே தெரிவிக்கவல்லது, இல் - இல்லை, எ-று.

(வி-ரை.) வினைநலம் ஒருவன் செய்யுந் தொழில் பொருளையே அன்றி அறத்தையும், புகழையுங் கொடுக்கு நன்மையாயிருத்தல். தீமையை மனம் அறிவித்தல்-அத்தீமைக்குத் தான் சாட்சியாய் நின்று அவனை வருத்தல். 'அகம் பொதிந்த தீமை' எனவும் பாடமுண்டு. உண்மை-குறிப்புத்தொழிற்பெயர். மலருண்மை - எழுவாய்த்தொகாநிலைத்தொடர்; தொழிற்பண்புத் தற்கிழமைப்பொருட்டாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரெனினும் அவ்வாறுவதும் வினைமுதற்பொருளில் வந்ததேயாம். முகம் - தொழிலுவமம்; உரைப்பது

வினையாலணையும்பெயர். சாற்ற முரைக்கும் என்பது முதலிய நான்கும் பேசாத அஃறிணைப்பொருள்களைப் பேசுவனபோல வைத்துக் கூறும் ஓர்மரபுவழுவமைதி [நன்-பொது-கூ-இஅ] "கேட்குந போலவும், கிளக்குந போலவும், இயங்குந போலவும், இயற்றுந போலவும், அஃறிணை மருங்கினும் அறையப் படுமே." முன்னம்-தொழிற்பெயர்; முன்-பகுதி, ன்-சந்தி, அம் - புடைபெயர்ச்சிவிகுதி; கருதப்பட்டதனைப் பொருள்கொண்டு, தொழிலடியாகப் பிறந்த பெயருமென்னலாம்; அம்-செயப்படுபொருண்மை விகுதி என்க. இல்லை என்பதில் ஐ-தொகுத்தல்; இதனைக் கடைக்குறை என்பாருமுளர். (சஅ)

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லை தவமும்
அரச னிலாவழி யில்லை யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.

(இ-ள்.) மழை இன்றி - மழை இல்லாவிட்டால், மா நிலத்தார்க்கு - பெரிய பூமியிலுள்ளார்க்கு, இல்லை - (பொருளும் இன்பமுமாகிய உலகியல்) இலதாகும்; மழையும்-(அத்தன்மையதாகிய) மழையும், தவம் இலார்-தவஞ்செயலுடையார், இல்வழி-இல்லாத இடத்து, இல்லை - பெய்தலில்லை; தவமும் - (அத்தன்மையதாகிய) தவமும், அரசன் இலாவழி - (நீதிதவறு தாளுகின்ற) அரசனில்லாவிடத்து, இல்லை - நடத்தலிலது; அரசனும் - அவ்வரசனும், இல் வாழ்வார் - இல்லறத்தோடுகூடி வாழ்பவர், இல்வழி - இல்லாவிடத்து, இல் - இலனாவான், எ-று.

(வி-ரை.) நன்மை தீமைகளைப் பகுத்துணர்தற்குரிய மக்கண்மேல் வைத்து 'மாநிலத்தார்க்கில்லை' என்றாராயினும் "ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே" என்பதனால் ஒழிந்த அஃறிணைக்குங் கொள்க. விசும்பிலா ரென்பதுபோன்ற தவமிலார் என்

பது தொழிலடியாகப் பிறந்தபெயர்; தவம் - பகுதி, இல் - சாரியை, ஆர் - பல்லோர்படர்க்கைவிகுதி. இவர் வீட்டைவிட்டு வனத்தில் தீயோடு போய் மனையாள் வழிபடத் தவஞ்செய்வோர். இத்தவ வொழுக்க மில்லாதபோது வேள்வி யில்லாமையால் மழையிலதாயிற்று. நீதிதவறாத அரச னில்லாதபோது அந்தணர் முதலானோர் ஒழுக்கங் கெடுவாராதலால் அவ்வரச னிலாதபோது தவமிலதாயிற்று. இல்வாழ்வாரென்றது குடிகளை. உம்மைகள் உயர்வுசிறப்பு. இல்வழி-பண்புத்தொகைநிலைத்தொடர்; விரிந்தால் இன்மையாகிய வழி என விரியும். தவமிலா ரில்வழி என்றது திணைவழுவமைதி; இதனை ஈறுகெட்ட பெயரெச்சத் தொகைநிலைத்தொடரென்பா ரொருவர்; பெயரெச்சம் ஈறுகெடின் இல்லாவழி என நிற்குமே அன்றி இங்ஙனம் நில்லாது; இதனைப் பெயரெச்சத் தொடரெனின் கருங்குதிரை, நற்கருமம் என்பவற்றையும் அத்தொடரென்னல் வேண்டும்; என்னின் பண்புத் தொகைநிலைத்தொடரொன்று இல்லையாகும்; ஆதலால் அது குற்றமாம். இலாவழி என்பதும் அத்தொகைநிலைத்தொடர். ஆகாரம் சாரியை; ஈறுகெட்ட பெயரெச்சத் தொகைநிலைத்தொடரெனினும் ஒக்கும். (சஎ)

போதினா னந்தும் புனைதண்டார் மற்றதன்
தாதினா னந்துஞ் சுரும்பெல்லாம்—தீதில்
வினையினா னந்துவர் மாக்களுந் தத்தம்
நனையினா னந்து நறா.

(இ-ள்.) போதினால் - பேரரும்பினால், புனை தண் தார்-தொடுக்கப்பட்ட மாலை, நந்தும் - மிகுதியாக விளங்கும்; அதன் தாதினால் - அம்மலர்களினுடைய தாதுக்களின் மணத்தினால், சுரும்பு எல்லாம் - வண்டுகளெல்லாம், நந்தும் - (அப்பேரரும்புகளில்) வந்து சேரும்; தீது இல்-தீங்கில்லாத, வினையினால்-நற்செய்கையினால், மாக்களும் - மனிதர்களும், நந்துவர் - உயர்வர்; தத்தம்-மாமுதலியவற்றின், நனை

வினல் - அரும்பின் செழுமையினல், கரு நந்தும் - தேன் பெருகும், எ - று.

(வி-ரை.) தாது, கணே - பொருளாகுபெயர். போது - காலவாகு பெயர்; போது-சாதியொருமை. உம்மை இறந்ததுதழீஇய எச்சவும் மை; அடுக்குப் பன்மைப்பொருளது. கரு என்னும் பெயர் குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகார ஈற்று மொழியாதலால் அவ்வாகாரங் குறுகி கற எனவும், அதனேடு உகரம் பெற்று கறவு எனவும் வரும். [நன்-உயி-கு-உஉ] "குறியதன் கீழ்ஆக் குறுகலும் அதனே டுகர மேற்றலும் இயல்பும்ஆம் தூக்கின்." (சஅ)

சிறந்தார்க் கரிய செறுதலெஞ் ஞான்றும்
பிறந்தார்க் கரிய துணைதுறந்து வாழ்தல்
வரைந்தார்க் கரிய வருந்து ணிரந்தார்க்கொன்
றில்லென்றல் யார்க்கு மரிது.

(இ - ள்.) சிறந்தார்க்கு - நட்பு மிகுந்தவர்க்கு, எஞ்ஞான்றும் - (தம்முள் ஒருவர்) பொறுத்தற்கரிய குற்றஞ் செய்தகாலத்தும், செறுதல்-(அவரது நட்பை) விட்டொழிதல்கள், அரிய-உண்டாகா; பிறந்தார்க்கு - (உயர்குடியில்) பிறந்தவர்க்கு, (எஞ்ஞான்றும்)-(பாத்தையால்) மிக்க செல்வம் பெறவந்த காலத்தும், துணை - (இல்லறத்துக்குத்) துணையாகிய மனையாளை, துறந்து - கைவிட்டு, வாழ்தல் - (அப்பரத்தையோடுகூடி) வாழ்தல்கள், அரிய - உண்டாகா; வரைந்தார்க்கு - (தம் உணவின் பொருட்செலவை) அளவுசெய்து வாழ்வார்க்கு, (எஞ்ஞான்றும்) - மிக்க செல்வம்பெற்ற காலத்தும், வருந்துணை-(விருந்தினர் முதலானோர்க்குப்) பகுத்துத் தாம் உண்ணுதல்கள், அரிய - உண்டாகா; யார்க்கும் - (அருளுடையார்) எல்லார்க்கும், (எஞ்ஞான்றும்)-வறியராணகாலத்தும், ஒன்று - (அவர்க்கு வேண்டிய

தாகிய) ஒரு பொருளை, இரந்தார்க்கு - யாசித்தவர்க்கு, இல் என்றல்- இல்லை என்று மறுத்தல், அரிது - உண்டாகாது, எ-று.

(வி-ரை.) பேசுதல், மருவுதல் முதலியவற்றால் செறுதலும், தாம் அநுபவிக்கும் பலவகை இன்பங்களால் வாழ்தலும், உணவின் வகையால் உண்ணுதலும் பலவாயின; இவ்வாறன்றிச் செறுதல் அரிய என்பது முதலிய மூன்றிலும் அரிய என்பன ஒருமையிற் பன்மை வந்த பால்வழுவமைதி என்னலுமாம். இங்கு அருமை இன்மை குறித்து நின்றது. துணை - பண்பாகுபெயர். பிறந்தார்கு - உடன் பிறந்தவர்க்கு, துணை துறந்து - சகோதரனை நீக்கி, வாழ்தல் - சுகித்தல்கள், அரிய - உண்டாகா என உரைத்தலுமாம். ஒன்று-எண்ணலளவையாகுபெயர். எஞ்ஞான்றும் என்பதை எல்லாவற்றோடுங் கூட்டுக. உம்மைகளிரண்டும் முற்றும்மைகள். ஞான்று - காலப்பொருளதாகிய இடைச்சொல். ஊண்-முதனிலை திரிந்த தொழிற்பெயர். என்றல்-இடைச்சொலடியாகப் பிறந்த தொழிற்பெயர். (சக)

இரைசுடு மின்புறு யாக்கையுட் பட்டால்
உரைசுடு மொண்மையி லாரை—வரைகொளா
முன்னை யொருவன் வினைசுடும் வேந்தனையும்
தன்னடைந்த சேனை சுடும்.

(இ - ள்.) இரை - கொழுமையான உணவு, இன்பு உறாத - (பிணியால்) துன்பப்படுகின்ற, யாக்கையுள் பட்டால் - உடலினுள் சேர்ந்தால், சுடும் - வருத்தும்; உரை - (அறிவுடையோரது) சொல், ஒண்மை இல்லாரை - அறிவில்லாரை, சுடும் - வருத்தும்; ஒருவன்- ஒருவனது, வரை கொளாத - அறத்தினது எல்லையைக்கொள்ளாத, முன்னை வினை-முற்பிறப்பிற் செய்த தீவினையானது, சுடும்-(அவனை இம்மையில்) வருத்தும்; வேந்தனையும்-அரசனையும், தன் அடைந்த சேனை-அவனைச் சார்ந்து வாழ்கின்ற சேனை, சுடும் - (முறையறிந்து காக்காவிட்டால்) வருத்தும், எ-று.

(வி-ரை.) நன்மை தீமைகளின் விளக்க உணர்தல் அறிவால் ஆதலால் அவ்வறிவை 'ஒண்மை' என்றார். யாக்கையு ளொன்றது வயிற்றை. கொளா என்னும் ஈறு தொகுத்தலாய் நின்ற எதிர்மறைப் பெயரெச்சம் காரணப்பொருட்டாய்நின்ற வினை என்னும் காரியமாகிய பிறபெயர் கொண்டது. யாக்கை என்பது தொழிலடியாகப் பிறந்தபெயர்; யா-பகுதி, க் - சந்தி, கு-சாரியை, ஐ - செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி; பொருள்: கட்டப்பட்டதென்பது; இவ்வாறன்றிக் கை-புடைபெயர்ச்சி விகுதியாகக்கொண்டு தொழிலாகு பெயரெனினும் ஒக்கும். உம்மை - உயர்வுசிறப்புப்பொருளது. உரைசுடு மொண்மையில்லாரை என்பதற்கு ஒண்மை இல்லாரை - அறிவில்லாரை, உரை சுடும் - (அவர் கூறும்) தீச்சொல் வருத்தும், எனவும் உரைக்கலாம். (௩௦)

எள்ளற் பொருள திகழ்தலொருவனை
உள்ளற் பொருள துறுதிச்சொல்—உள்ளறிந்து
சேர்தற் பொருள தறநெறி பன்னூலும்
தேர்தற் பொருள பொருள்.

(இ-ள்.) ஒருவனை இகழ்தல் - பிறனொருவனை (ஒருவன்) அவமதித்தல், எள்ளற்பொருளது-(தன்னை அறிவுடையோர்) நிந்தித்தலாகிய பொருளமைந்தது; உறுதிச்சொல் - (ஒருவன்சொல்லும்) நன்மையாகிய சொல், உள்ளற்பொருளது-(அவனை) நன்குமதித்தலாகிய பொருளமைந்தது; அறநெறி-அறத்தினது வழி, உள் அறிந்து-(ஒருவன் தன்) உள்ளத்தில் தெளிந்து, சேர்தற்பொருளது-(பின் அதில்) சேர்ந்து நடப்பதாகிய பொருளமைந்தது; பொருள் - மெய்ப்பொருள்கள், பல் நூலும் - பலநூல்களும், தேர்தற்பொருள - ஆராய்தலாகிய பொருளமைந்தன, எ-று.

(வி-ரை.) ஒருவன் பிறனொருவனை அவமதிப்பானாயின் இவன் பிறர் செல்வங்கண்டு மகிழாதவனென்று அறிவுடையோர் கூறுவார்

லால் எள்ளற்பொருள நிகழ்தலாயிற்று. தொழிலும் பொருளெனப் படுதலால் எள்ளல் முதலிய நான்கனோடும் பொருளது பொருள என்னும் படர்க்கைக்குறிப்பு வினைமுற்றுகளின் பகுதிகளாகிய பொரு ளென்பன இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத் தொடர்களாகப் புணர்ந்தன. நால்களைப்பற்றித் தேர்தற்றொழில் பலவாயின. உம்மை-முற்றும்மை. பொருளின தறுதியைச் சொல்லுக்கும் பொருளுக்கும் உண்டாகிய ஒற்றுமையைக் கருதிச் சொல்லின்மேலேற்றி 'உறுதிச் சொல்' எனக் கூறினர். இதுவும் பண்புத்தொகைநிலைத்தொடர்; நி-புடைபெயர்ச்சிவிகுதி; தொழிலடியாகப் பிறந்த பெயரெனக்கொண்டு இரண்டாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்க தொகைநிலைத் தொடராகவுங் கொள்ளலாம்; பொருள்: அடையப்படும் நன்மையைத் தருஞ் சொல் என உரைக்க. பகுபத உறுப்பு: உறு - பகுதி, த்-எழுத் துப்பேறு, இ-செயப்படுபொருண்மை விகுதி. (இக)

யாறு ளடங்குங் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.

(இ - ள்.) யாறு - நதிகள், உள் அடங்கும் - தம்முள் அடங்கு கின்ற, குளம் உள - பெருங்குளங்கள் உள்ளன; வீறு சால் - எல்லாப் பெருமைகளும் நிறைந்த, மன்னர் - அரசர், விழையும் - விரும்பித் தழுவும், குடி உள - குடிகளுள்ளன; தொல் மரபின் - பழமையாகிய முறைமையையுடைய, வேதம் - வேதத்தின் பொருள், உறுவன - பொருந்துவன ஆகிய, பாட்டு உள - செய்யுள்களுள்ளன; வேள்வி யோடு ஒப்ப - யாகத்தோடொப்பன ஆகிய, வேளாண்மை உள - ஈகைகள் உள்ளன, எ-று.

(வி - ரை.) யாறென்னும் இடத்தின்பெயர் அவ்விடத்து நிகழ் பொருளாகிய நீருக்காதலால் இடவாகுபெயர். பழமையாகிய முறை

மையாவது-இறைவன் அன்னவுருவாகிப் பிரமனுக்கு உபதேசித்தது முதல் அந்தணர் முதலியோரால் மேன்மையாகக் கொள்ளப்படுதல். வேதம் - கருவியாகுபெயர். பாட்டு-முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; செய்யுளுக்காதலால் தொழிலாகுபெயர்; இவ்வாறன்றிப் பாடு-பகுதி, செயப்படுபொருண்மை விகுதியாகிய ஐ புணர்ந்துகெட்டு, கெட்ட மாத்திரத்தில் டகரவொற்று இரட்டிய தொழிலடியாகப் பிறந்தபெய ரென்றாயினும், பாண்-பகுதி, டு - ஒன்றன்படர்க்கை விகுதி, ணக ரம் டகரமானது சந்தி என முடிந்த தொழிலடியாகப் பிறந்த பெய ரென்றாயினும் கொள்ளலாம். டுவ் விகுதி எனக்கொண்ட பாட்டு பன் மையி னொருமைவந்த வழுவமைதி. ஒடுருபு ஒப்புப்பொருளது. வேள் வியோடொப்ப என்றதனால் வேளாண்மை கைம்மாறு செய்ய வலி யில்லாத நல்லோர்க்குக் கொடுக்கும் ஈகை என்க. வேளாண்மை வந் தோருடைய விருப்பத்தை ஆளுதல்; அது தலைமைபற்றிப் பொரு ளீகைக்காயிற்று; கொடுக்கப்படும் பொருளின் வகைபற்றி வேளா ண்மை பன்மையாய் நின்றது. (நஉ)

எருதுடையான் வேளாள னேலாதான் பார்ப்பான்
ஒருதொடையான் வெல்வது கோழி—உருவோ
டறிவுடையா ளில்வாழ்க்கைப் பெண்ணெனன்பாள் சேனை
செறிவுடையான் சேனா பதி.

(இ - ள்.) எருது உடையான் - மிக்க உழுமாடுகளுடையான் வேளாளன் - வேளாளனாவான்; ஒரு தொடையான் - ஒரு தொடை யின் வல்லமையாலே, வெல்வது - வெல்லவல்லதாகிய, கோழி - சேவல்போல, ஏலாதான் - (ஒருவரது பகையை) ஏற்றுக்கொள ளில்லாதவன், பார்ப்பான் - பிராமணனாவான்; உருவோடு-(கணவன் விரும்பத்தக்க) உருவத்தோடு, அறிவு உடையாள்-(இல்லற வொழுக் கத்தை) அறிதலுடையவள், இல்வாழ்க்கை - இல்வாழ்க்கைக்குரிய பெண் என்பாள் - பெண்ணென்று சொல்லப்படுவோள்; சேனை -

(போர்முகத்தில்) தன்படையை, செறிவு உடையான் - விட்டு நீங்காமையை உடையவன், சேனாபதி - படைத்தலைவனாவான், எ-று.

(வி-ரை.) ஒரு தொடையான் வெல்வது கோழி என்பதை ஒரு மொழியாகக் கொள்ளின் ஐந்து பொருள் கூறியதாகுமாதலால் உவமையாக்குக. உழுதொழிலுக்குச் சிறந்த கருவிகளி லொன்றாதலால் 'எருதுடையான் வேளாளன்' எனவும், அருளுடையனா யிருக்கவேண்டுமாதலால் பிறர் பகைத்தால் அவர்மேல் மீண்டு பகைகொள்ளாதவன் 'பார்ப்பான்' எனவும் கூறினர். இல்லறவொழுக்கத்தை அறிதலாவது- கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்து, கணவனது பொருள் வருவாய்க்குத் தக்க செலவு செய்தலும், உண்டி முதலியவற்றால் அவனைக் காத்தலும், விருந்தினரை உபசரித்தலு முதலியன அறிந்து நடத்தல். வேளாளன்-தொழிலடியாகப் பிறந்த ஆண்பாற்படர்க்கைப் பெயர்; வேளாள் - பகுதி, அன் - ஆண்பாற்படர்க்கைவிகுதி; எல்லாருடைய விருப்பத்தையும் ஆள்பவனென்பது. எலாதானென்பதற்கு மிக்க பொருளாசையால் மானங்கெட ஏற்காதவனென உரைப்பினும் பொருந்தும்; இது எதிர்மறை வினையாலணையும்பெயர். வெல்வது - உடன்பாட்டு வினையாலணையும்பெயர். உடையான், உடையான் இரண்டும் பண்படியாகப் பிறந்த பெயராகா; அதனடியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயரொன்றேயாம். என்பான் - செயப்படுபொருளை வினைமுதல்போலக் கூறப்பட்ட வினையாலணையும்பெயர்; அன்றிச் செயப்பாட்டு வினையாலணையும் பெயரெனினும் ஒக்கும்; என் - பகுதி, அ- சாரியை, ப்-சந்தி, படு - செயப்பாட்டு வினைப்பொருண்மை விகுதி, அனைத்து மொருபகுதி, வ்-எதிர்கால இடைநிலை, ஆன் - பெண்பாற் படர்க்கைவிகுதி, படு விகுதியும், அதுபற்றிவந்த சாரியை முதலியனவும் தொகுத்தலாய் நின்றன. (௫௧)

யானை யுடையார் கதனுவப்பர் மன்னர்
கடும்பரிமா காதலித் தூர்வர் கொடுங்குழைய

நல்லாரை நல்லவர் நாணுவப்ப நல்லாரை
அல்லா ருவப்பது கேடு.

(இ - ள்.) யானை உடையார் - யானையை ஆளுதலுடைய அரசர், கதன் உவப்பர் - (போர்முகத்தில் அதனது) கோபித்தலை மகிழ்வார்; மன்னர் - அரசர், கடு பரிமா - (ஓடுதலில்) வேகமாகிய குதிரையை, காதலித்து - விரும்பி, ஊர்வர் - நடத்துவார்; கொடு குழைய - வளைவாகிய காதணியணிந்த நல்லாரை - சிறந்த அழகுடைய மாதரை, நல்லவர் - நற்குணமுடையார், நாண் உவப்பர் - (அம்மாதரிடத்துள்ள) நாணமென்னுங் குணத்தினால் மகிழ்வார்; அல்லாரை - தீயாரிடத்து, அல்லார் - தீயோரால், உவப்பது - விரும்பப்படுவது கேடு - கேட்டைத்தருஞ் செய்கையாம், எ-று.

(வி-ரை.) அரசர் யானையினிடத்து அது போர்முகத்தில் அஞ்சாமல் கோபங் கொள்ளுதலையும், குதிரையினிடத்து அது விரைந்தோடும் ஓட்டத்தையும், நல்லவர் பெண்களிடத்து நாணமென்னுங் குணத்தையும், தீயவர் தீயவரிடத்துத் தீச்செயலையும் இருக்கக் கண்டு உள்ளம் மகிழ்வார். கதன் - இருகுறிலையடுத்த மகரவீற்றுப் பெயர்ச்சொலாதலால் மகரத்துக்கு னகரம் போலியாக வந்தது. கடும்பரி - பண்புத்தொகைநிலைத்தொடர்; விரித்தால் கடுமையாகிய பரி என விரியும்; சடு என்பதைக் கடி என்னும் உரிச்சொல்லின் திரிபெனக் கொள்ளின் உரிச்சொற்றொகைநிலைத் தொடருமாம். பரிமா இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர். கேடு - காரியவாகுபெயர்; முதனிலைதிரிந்த தொழிலாகுபெயரெனினும் ஒக்கும். உவப்பது - எதிர்காலச் செயப்பாட்டு வினையாலணையும்பெயர். முன்னே நல்லவ ரென்றமையால் அல்லார் தீயவருக்காயிற்று. அல்லாரை உருபுமயக்கம். (௫௪)

நுண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்

ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை யீன்றாளின்
எண்ணக் கடவுளு மில்.

(இ-ள்.) கண்ணின் சிறந்த - (உயிர்களுக்குக்) கண்ணைப்போல் மேம்பட்ட, உறப்பு இல்லை-வேறு அவயவமில்லை; கொண்டானின்-(குலமகளுக்குக்) கணவனைப்போல, துன்னிய கேளிர் - நெருங்கிய உறவினர், பிறர் இல்லை - மற்றவரில்லை; மக்களின் - (தாய் தந்தையர்க்கு) நற்குணமுள்ள பிள்ளைகளைப்போல, ஒண்மைய ஆய் - ஒளியுள்ளன ஆகி, சான்ற பொருள் இல்லை - நிறைந்த பொருள்கள் வேறில்லை; ஈன்றாளின்-(பிள்ளைகளுக்குத்) தாயைப்போல,எண்ணக் கடவுளும் இல்-(உயர்வாக) மதிப்பதற் குரிய கடவுளுமில்லை, எ-று.

"கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கல்வியின்
றுண்ணிய வரய பொருளில்லை—கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை யீன்றாளோ
டென்னக் கடவுளுமில்." எனவும் பாடமுண்டு.

(வி-ரை.) உயிர்களுக்கு அவயவங்களில் கண் சிறந்த அவயவமென்றும், குலமகளுக்கு உறவினரில் கணவன் சிறந்த உறவென்றும், தந்தை தாயர்களுக்குப் பொருள்களில் மக்கள் சிறந்த பொருளென்றும், யாவரும் அன்பால் உயர்வாக மதிக்கத் தகுந்தவள் தாயென்றுங் கொள்க. இந்நான்குருபுகள் ஒப்புப்பொருளன. நற்குணமுள்ள பிள்ளைகள் இம்மையில் தாய் தந்தையர்களுக்கு உண்டி முதலியன தந்து விளங்கச் செய்தலே அன்றி மறுமையினும் அவர் தீவினைகள் குறைவதற்குக் காரணமாகிய தான தருமங்களைச் செய்து அவரை விளங்க வைத்தலால் அப்பிள்ளைகளை 'ஒண்மையவாய்ச் சான்றபொருள்' என்றார். கேளிர் - நண்படியாகப்பிறந்த பலர்பாற் படர்க்கைப் பெயர்; இர் என்னும் பல்லோர்படர்க்கை விகுதிப் புணர்ச்சியில் கேண்மை என்னும் பண்புப்பெயர் மையீறு கெட்டது; இர் விகுதி

பல்லோர்படர்க்கை விகுதியாய் வருதல் மகளிர், பெண்டிர், புத்தேளி ரென்பவற்றிலும் காண்க. ஒண்மைய-பண்படியாகப் பிறந்த பலவின் படர்க்கைக் குறிப்புவினைமுற்று. சான்ற - உரிச்சொலடியாகப்பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம்; சால் - பகுதி, ற் - இறந்தகால விடைநிலை, அ - பெயரெச்சவிகுதி, லகரம் றகரமானது சந்தி, அது னகரமானது மெலித்தல்விகாரம். உம்மை உயர்வுசிறப்பு. (இஇ)

கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்
செற்றன்னர் செற்றாரைச் சேர்ந்தவர்—தெற்றென
உற்ற துரையாதா ருள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறிவி னார்.

(இ-ள்.) கற்றாரை - கற்றுணர்ந்தவரை, காதலர் - விரும்பி அவரைப் பிரியாதவர், கற்றால் அன்னர் - கற்றாலொத்த அறிவினராவர்; கண்ணோடார் - தாட்சிணியமில்லாதவர், செற்றால் அன்னர் - கொன்றாலொத்த கெடுதியுடையார்; உற்றது - நடந்த செய்தியை, தெற்றென - தெளிவாக, உரையாதார்-(சாட்சியாகும்போது) சொல்லாதவர், செற்றாரைச் சேர்ந்தவர் - பகைவரைச் சார்ந்தவர்; புல் அறிவினார் - சிற்றறிவினர், உள் கரந்து - உள்ளே மறைந்து, பாம்பு உறையும்-பாம்பு தங்குகின்ற, புற்று அன்னர்-புற்றை ஒப்பர், எ-று.

(வி-ரை.) கற்றன்னர் என்பதில் கற்றாலென்னும் நிலைமொழியீறு தொகுத்தலாய் நின்றது. கற்றவரென்பது ஈறு தொகுத்தலாய் நின்றதெனினும் ஒக்கும்; இவ்வாறே செற்றன்ன ரென்பதையும் பிரிக்க. காதலர் - செயப்படுபொருள் குன்றாத பல்லோர் படர்க்கைக் குறிப்பு வினைப்பெயர்; காதல் - ஒன்றின் மனமெழுந்து தாக்கும் விருப்பம்; இதனடியாகக் காதலி, காதலித்தல், காதலித்து, காதலித்த, காதலித்தான் எனத் தெரிநிலைவினைகள் பிறக்கும். கல்லாதவர் கற்றவரை விரும்பி, அவரைப் பிரியாம லிருப்பாராயின், அவர் கூறும்

கல்விப்பொருள்களைக் கேட்டு அவற்றைத் தாம் அடைதலால், அவரைக் 'கற்றன்னர்' எனவும், நட்பினரிருவரில் ஒருவர் தம் அறிவின்மையால் மற்றொருவர் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளும் இயல்பில்லாமல் தண்டிக்குங் கண்ணோடாரைச் 'செற்றன்னர்' எனவும், நடந்ததை உள்ளபடி நியாயத்தலத்தில் சொல்லாத சாட்சியானவர் பகைவரோ டொத்தவராதலால் அவரைச் 'செற்றாரைச் சேர்ந்தவர்' எனவும், தம்மோடு பிறர் நட்புக்கொள்ளுமுன் தமது தீயகுணங்களைப் புறத்தில் தோன்றாமல் மறையவைத்து, நெருங்கி நட்புக்கொண்டபின் தமது தீக்குணங்களைக் காட்டலால் 'புல்லறிவினர் பாம்பு உள்கார்ந்துறையும் புற்றன்னர்' எனவுங் கூறினர். (௩௪)

மாண்டவர் மாண்ட வினைபெறுப வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே—யாண்டும்
பிறப்பார் பிறப்பா ரறனின் புறுவர்
துறப்பார் துறக்கத் தவர்.

(இ - ள்.) மாண்டவர் - (அறிவால்) மாட்சிமைப்பட்டவர், யாண்டும் - எக்காலத்தும், மாண்ட வினை - மாட்சிமைப்பட்ட செய்கைகளை, பெறுப - செய்யப்பெறுவர்; வேண்டாதார்-(நல்வினையை) விரும்பாதவர், வேண்டா வினையும் - (தம்மால்) வேண்டப்படாத தீவினைப்பயனையும், பெறுப - பெறுவார்கள்; பிறப்பார் - பிறப்பவர், பிறப்பு - அப்பிறப்பில் செய்த, ஆர் அறன் - அருமையாகிய அறத்தினால், இன்பு உறுவர்-(மறுமையில் தேவராய்) இன்பத்தை அடைவர்; துறப்பார் - (யானென்னும் அகப்பற்றையும் எனதென்னும் புறப்பற்றையும்) துறப்பவர், துறக்கத்தவர் - முத்தியுலகத்தாராவர், எ-று.

(வி-ரை.) முன்செய்த சிறிது நல்வினைப் பயனையுமடைதலால் அதனை இறந்ததுதழீஇய எச்ச உம்மையால் தழுவினர். துறப்பவர் முத்தியுலகத்தை யடைதல் திண்ணமாதலால் துறக்க முறுவரென்

ஞமல் 'துறக்கத்தவர்' எனப்பட்டார். அறிவின் பெருமையுடையார் பழிக்கப்படும் இழிதொழிலைச் செய்யக் கருதாமல் பெருமையாகிய செயல்களைச் செய்வர்; அறப்பயனை விரும்பாதவர் தம்மால் விரும்பப்படாத தீவினைப்பயனாகிய துன்பத்தையும் பெறுவார்கள்; பிறக்கும் இயல்பினராகிய மக்கள் அப்பிறப்பில் செய்த நல்வினை மிகுதியால், மறுமையில் சுவர்க்க இன்பத்தைப்பெறுவார்; துறவிகள் முத்தியுலகத்தைப் பெறுவார். மாண்டவர் - ஈறுதிரிந்த இறந்தகால வினையாலணையும்பெயர்; பகுதி - மாண்; இது உரிச்சொல். யாண்டுமென்பது கடைநிலைத் தீவகமாய் நின்றதாதலால் அதனை முன்னும் பின்னுங் கூட்டுக. பெறுப - பல்லோர்படர்க்கை எதிர்கால வினைமுற்று; பெறு - பகுதி, ப-பல்லோர்படர்க்கை எதிர்காலவினைமுற்று விகுதி; இது அஃறிணையில் பெறுவ என வருதலால் பொதுவினையெனப்படாது. (௬௭)

என்று முளவாகு நாளு மிருசுடரும்
என்றும் பிணியுந் தொழிலொக்கு மென்றும்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாரும்
சாவாரு மென்று முளர்.

(இ - ள்.) என்றும் - எக்காலத்தும், நாளும்-நாண்மீன்களும், இருசுடரும் - சந்திரனும் சூரியனும், உள ஆகும் - உள்ளன ஆகும்; என்றும் - எக்காலத்தும், பிணியும் - (தொழிலுண்டாகாமைக்குக் காரணமாகிய) நோயும், தொழில் - (உழவுமுதலிய) தொழிலும் ஒக்கும் - உள்ளன ஆகும்; என்றும் - எக்காலத்தும், கொடுப்பாரும் - (ஒளிக்காமல்) கொடுப்பவர்களும், கொள்வாரும்-ஏற்போரும், அன்னர் - உளர் ஆவர்; என்றும்-எக்காலத்தும், பிறப்பாரும் - பிறப்பவர்களும், சாவாரும் - இறப்பவர்களும், உளர் - ஆவர், எ-று.

(வி-ரை.) ஒக்கும், அன்னரென்றது மேற்கூறிய உளவாதலை என்க. என்றுமென்றது நிகழ்காலத்திலேயே அன்றி இறந்தகாலத்தி

லும், எதிர்காலத்திலு மென்றபடி. நாண்மீன்களும் சந்திராதித்தர்க ளும் உள்ளவாதல் உதித்துத் தோன்றுதல். நாண்மீன்-நட்சத்திரம். உலகத்தில் நாண்மீன் முதலியவற்றின் தோற்றமும், பிணியும், தொழிலும், கொடுத்தலும், கொள்ளலும்,பிறத்தலும், சாதலும் இடை யறுமலுள்ளன என்பது கருத்து. சுடர் - பண்பாகுபெயர். தொழி லென்பத னீற்றில் எண்ணும்மை விகாரத்தால் தொக்கது. பிணி - தொழிலடியாகப்பிறந்த பெயர்; பிணி-பகுதி, இ-வினைமுதற்பொரு ண்மைவிகுதி புணர்ந்துகெட்டது; பொருள்: தன்னை யடையப்பெற் றவரை ஒருமுயற்சியும் செய்யவிடாமல் தன்வசத்திலே தங்கும்படி கட்டுவது. விகுதி கருவிப்பொருண்மைவிகுதி யென்பாருளராயின், வினைமுதல் யாதென வினவி, அவர் மடமையை ஒழிக்க; இங்ஙன மன்றி முதனிலைத்தொழிலாகுபெயரெனினு மொக்கும். (கஅ)

இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகனொழிந்து வாழ்வான்
தனிய னெனப்படுவான் செய்தநன் றில்லான்
இனிய னெனப்படுவான் யார்யார்க்கே யானும்
முனியா வொழுக்கத் தவன்.

(இ-ள்.) இனிது உண்பான் என்பான் - நல்லுணவை உண்பவ னென்று சொல்லப்படுவோன், உயிர் கொல்லாது - பிற உயிர்களைக் கொல்லாமையாலாகிய உணவை, உண்பான்-உண்டுவாழ்பவன்; முனி தக்கான் என்பான் - (யாவராலும்) வெறுக்கத்தகுந்தவனென்று சொல்லப்படுவோன், முகன் ஒழிந்து - முகமலர்ச்சியில்லாதவனாகி, வாழ்வான்-வாழ்பவன்; தனியன் எனப்படுவான் - துணையில்லாதவ னென்று சொல்லப்படுவோன், செய்த நன்று இல்லான்-(பிறர்க்கு)உப காரஞ்செய்தலில்லாதவன்; இனியன் எனப்படுவான்-நல்லனென்று சொல்லப்படுவோன், யார் யார்க்கே ஆனும் - எவரெவரிடத்தே ஆ

னும், முனியாத - வெறுக்கப்படாத, ஒழுக்கத்தவன் - நடையையுடையவன், எ - று.

(வி-ரை.) சொல்லாது - வினைமுதல் வினையைக் காரியத்தின் மேலேற்றிக் கூறும் எதிர்மறை வினையாலணையும்பெயர். இனிது - பண்படியாகப் பிறந்தபெயர்; குறிப்பு வினைப்பெயருமாம். முனியத் தக்கானென்பது முனிதக்கானெனத் தொகுத்தலாய்நின்றது. மகன் - பொருளாகுபெயர். செய்த நன்றில்லான் என்பதை நன்றுசெய்த தில்லானெனப் பின் முன்னாகநிறுத்திப் பொருள்கொள்க; அப்படிக் கொள்ளும்போது பெயரெச்சம் தொழிற்பெயர்ப் பொருள்பட நின்றது. அதிக்குப் பண்மைப்பொருளது. குவ்வுருபு இடப்பொருளில் வந்தது. ஏ-தேற்றம். ஆன்-ஆயினென்பதன் மரூஉ. உம்மை-முற்று. ஈற்றடி 'முனியாத வுள்ளத்தவன்' எனவும் பாடமுண்டு. (௫௬)

ஈத்துண்பா னென்பா னிசைநடுவான் மற்றவன்
கைத்துண்பான் காங்கி யெனப்படுவான் றெற்ற
நகையாகு நண்ணார்முற் சேறல் பகையாகும்
பாடறியா தானை யிரவு.

(இ - ள்.) ஈந்து - (வறியார்க்குக்) கொடுத்து, உண்பான் என்பான் - (தானும்) அநுபவிப்பவனென்று சொல்லப்படுவோன், இசை நடுவான் - புகழை நிறுத்தவல்லவன்; அவன் கைத்து - அவனுடைய பொருளை, உண்பான் - உண்பவன், காங்கி என்ப்படுவான் - குடம் போலுஞ். சுதந்தர மில்லானென்று சொல்லப்படுவான்; நண்ணார் முன்-பகைவரிடத்து, சேறல் - (ஒருவன் நட்பை விரும்பிச்) செல்லுதல், தெற்ற நகை ஆகும் - (பிறர் தன்னைத்) தெளிய அவமதித்துச் சிரித்தற்குக் காரணமாகும்; பாடு - (பிறருடைய) வறுமைத் துன்பத்தை, அறியாதானை - உணரமாட்டாதவனிடத்து, இரவு-இரத்தல், பகை ஆகும் - இரப்போனுக்கு விரோதமாகும், எ-று.

(வி-ரை.) ஈந்து ஈத்தென வலித்தலாயிற்று. மற்று-கைத்துண் பானைச் சார்ந்ததாதலால் பிறிதென்னும் பொருளது. கைத்தென்பது செல்வப்பொருள்; கை-பகுதி, த்-சந்தி, து-ஒன்றன்படர்க்கைவிகுதி; ஒருவன் வசத்திலுள்ள தென்பது. காங்கி - பண்படியாகப் பிறந்த பெயர்; காங்கு - பகுதி, இது தமிழ்மொழி, இ - ஆண்பாற்படர்க்கை விகுதி, உகரக்கேடு சந்தி; காங்கு-பெரிய மட்பாத்திரம்; அது பொருளாகுபெயராய் அதன் தன்மையை யுணர்த்தியது. ஒருவனால் காக்கப் படுவோன் காங்கின் தன்மைபோலத் தனக்கென ஒரு சுதந்தரமில்லாதவனும், நிலைமையில்லாத வாழ்க்கை யுடையவனுமா யிருத்தலால் அவனைக் 'காங்கி' என்றார்; கருங்குழலி, தம்பி என மற்ற ஒருமையிலும் இகரவிகுதி வரும்; காங்க்ஷி என்னும் வடமொழியின் திரிபெனினு மொக்கும்; பொருள்: விருப்பமுள்ளவ னென்பது; அதாவது, யாதொரு முயற்சியும் இல்லானாகிப் பிறர் பொருளால் உயிர் வாழ்பவன். தன் வருத்த மறியமாட்டாமல் இல்லை என்பானிடத்தில் இரத்தல் அவ்விரப்போனுக்கு இனிமையைத் தராமையினாலே பகையாயிற்று. பகை - தொழிற்பெயர்; பகு - பகுதி, ஐ - புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. நகை என்பதும் இப்பெயர். இவ்விரண்டினடியாகப் பகைத்தல், நகைத்தலென வினை விகற்பங்களெல்லாம் பிறக்கும். பாடு - முதனிலைதிரித்த தொழிலாகுபெயர். அறியாதானை - உருபுமயக்கம். (௪௦)

நெய்விதிர்ப்ப நந்து நெருப்பழற் சேர்ந்து
வழுத்த வரங்கொடுப்பர் தேவர் தொழுத்திறந்து
கன்றூட்ட நந்துங் கறவை கலம்பரப்பி
நன்றூட்ட நந்தும் விருந்து.

(இ-ள்.) நெருப்பு அழல் - தீயினது சுடர், நெய் விதிர்ப்ப - நெய்யைச் சிந்த, நந்தும் - ஓங்கும்; தேவர் - தேவர்கள், சேர்ந்து -

(தம்மை ஒருவன்) அடைந்து, வழுத்த - துதிக்க, வரம் கொடுப்பர் - (அவன் வேண்டிய) வரத்தைக் கொடுப்பார்; கறவை - கறக்கும் பசு, தொழுத் திறந்து - கொட்டிலைத் திறந்து, கன்று ஊட்ட - கன்றினை உண்பிக்க, நந்தும் - பால் பெருகும்; விருந்து - விருந்தாக வந்தவன், கலம் பரப்பி - உண்கலத்தை விரித்து, நன்று ஊட்ட - இனிமையாக உண்பிக்க, நந்தும் - மனங்களிப்பான், எ-று.

(வி-ரை.) அழல் எழுவாயாதலால் லகரந் திரியாது நின்றது. நெருப்பென்றது ஓமத்தீயை. விதிர்ப்ப முதலிய செயவெனெச்சங்கள் காரணப்பொருளன ஆதலால் இறந்தகாலத்துக்குரியன. ஊட்ட: உண்-பகுதி, பிறவினைப்படுத்தும் டு விகுதி புணர்ந்தபோது, ஆதி நீண்டு, ணகரம் டகரமாய் நின்ற ஊட்டு-பகுதி, அ - செயவெனெச்ச விகுதி, உகரக்கேடு சந்தி. கறவை - தொழிலடியாகப் பிறந்தபெயர்; கற-பகுதி, வ்-சந்தி, ஐ - வினைமுதற்பொருண்மை விகுதி. பரப்பி என்றமையால் கலம் இலைக்கலமென்க. பரப்பி - பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம்; பர-பகுதி, பு-பிறவினைபடுத்தும் விகுதி, ப்-சந்திபெற்றுநின்ற பரப்பு - பகுதி, உகரத்தின் திரிபாகிய இகரம் விகுதி, உகரக்கேடு சந்தி; பரம்பென்னுந் தன்வினைப்பகுதி வலித்தல் பெற்றுநின்ற பரப்பு பகுதி எனினும் ஒக்கும். விருந்து - பண்பாகு பெயர். விருந்து - புதுமை. நன்றூட்டலாவது உபசரித்துண்பித்தல். நன்றென்பதை வினையுரியாகக் கொள்ளாமல் பண்படியாகப் பிறந்த பெயரெனக் கொண்டு நல்ல வுணவை என உரைக்கினும் பொருந்தும். 'வரங்கொடுக்கு நாகம்' எனவும் பாடமுளது; 'வரத்தைக் கொடுப்பர் விண்ணில் திரிபவராகிய தேவர்' என வுரைக்க. நாகம்-இடவாகு பெயர். (கக)

பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழியின்மை கேட்டா லறிக பொருளின்